ரோமாபுரிப் பாண்டியன்
முரசொலி
ஆசிரியர்: மு. கருணாநிதி

மனிதனின் கதை

பி. சி. கணேசன்

28. அரசியல் வித்தகன் மாக்கியவெலி

அன்புள்ள மாதவி,

அறத்தின் அடிப்படையில்தான் அரசியல் அமைப்பு அமைய வேண்டுமென்று தமிழ்மறை வலியுறுத்துகிறது. மக்களுடைய சமுதாய வாழ்க்கையை ஒழுங்குபடுத்தும் அரசியற்கலை ஒழுங்கின்றி அமையுமானால் சமூக வாழ்க்கை சீர்குலைந்து போகும் என்ற நம்பிக்கை தமிழனுடையது! அர்த்த சாஸ்திரம் எழுதிய மதியூகி சாணக்கியன் அரசியலை சூதாட்டக்களமாக எண்ணினான். பதினைந்து-பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்த மாக்கியவெலி (Machiaveli) என்ற இத்தாலிய அரசியல் வித்தகன், அரசியற்கலைக்கு ஒரு புதிய கண்ணோட்டம் கொடுத்தான். நல்ல லட்சியங்களையுடைய நல்ல பலவழிகளையே கடைப்பிடிக்க வேண்டிய அவசியமில்லை என்று துணிந்து சொன்னான். தீமைகளைச் செய்தாவது சில நன்மைகளை நிலைநிறுத்த முடியுமானால் தீமைகளைச்செய்வதில் எவ்விதத் தவறுமில்லை என வாதிட்டான். அரசியல் பித்தலாட்டங்களை விஞ்ஞான அடிப்படையில் ஆராய்ந்து அவற்றை முறையான விதிகளாக அமைத்துக் காட்டினான். தற்கால அரசியற்கலைக்கு அஸ்திவாரமிட்டவன் மாக்கியவெலி என்று போற்றப்படுகிறான்.

ஒல்லியான கரிய உருவமும் மிகத் தீட்சண்யமான கண்களும் கொண்டவன் மாக்கியவெலி! இத்தாலிய கிராம மொன்றில் இருந்த தன்னுடைய தோட்டத்தில் அமர்ந்து வெறிகொண்டவன்போல் நூல்களைப் படித்தான்; விடாமல் எழுதிக் குவித்தான். எழுதுகின்ற பொழுது அவனுடைய கண்கள் பிரகாசமாக மின்னுமாம்!

மாக்கியவெலியின் அரசியல் கோட்பாடுகளைப் படித்த பிறகுதான் பாக்தாத் நகர சுல்தான்கள் அண்ணன் தம்பிகளைக் கொன்று, உற்றார் உறவினர்களைச் சிறையில் அடைத்து, சதி சாகசங்களைக் கொஞ்சமும் அச்சமின்றிப் புரிந்து தங்கள் அரசியல் பலத்தை வளர்த்துக் கொண்டார்கள் என்று வேடிக்கையாகக் குறிப்பிடுவது உண்டு. அதனால் மாக்கியவெலியின் காலத்துக்கு முன் அரசியல் வாழ்வு நேர்மையாகவே நடந்து வந்தது என்றதோர் முடிவுக்கு நீ வரவேண்டியதில்லை. ஊழல்கள் எப்பொழுதும் இருந்தன. ஆனால் அவை இருப்பதற்கான காரணங்களையும், விளையும் பலாபலன்களையும் ஆட்சிப் பீடத்தில் இருப்போர் எந்த அளவுக்கு அவைகளை அனுமதிக்கலாம் என்பது பற்றி நன்கு ஆராய்ந்து சொன்னவன் மாக்கியவெலி. அரசியல் பலம் பெற்றவர்களின் வாழ்க்கையையும் நடவடிக்கைகளையும் கூர்ந்து நோக்கிப் பற்பல உண்மைகளை அவன் கண்டறிந்தான். கண்ட உண்மைகளைத் தனது முடிவுகளோடு ஏட்டில் எழுதி வைத்தான்.

1469-ம் ஆண்டு, மே மாதம் 13-ம் தேதி இத்தாலியிலுள்ள ஃபிலாரன்ஸ் (Florence) நகரில் மாக்கியவெலி பிறந்தான். பண்பும் படிப்பும் கொண்ட தந்தைக்கு மகனாகப் பிறந்த மாக்கியவெலி, இளம் பிராயத்திலேயே இலக்கியத்திடம் அளவில்லாப் பற்றுக் கொண்டிருந்தான். இத்தாலிய, லத்தீன் மொழி இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தான். ரோமானிய வரலாற்றை ஊன்றிப் படித்தான். தனது எண்ணங்களையெல்லாம் கட்டுரைகளாக வடித்தான்.

அந்தக் காலத்தில் இத்தாலி பற்பல சிறு நாடுகளாகச் சிதறுண்டு கிடந்தது. அந்த நாடுகளிடையே போட்டியும் பூசலும், பொருமையும் பொல்லாப்பும் இருந்து வந்தது. சதியும் சண்டையும் நித்திய நிகழ்ச்சிகளாக இருந்தன. சாதாரண குமாஸ்தாவாக வாழ்க்கையை ஆரம்பித்த மாக்கியவெலி, படிப்படியாக வளர்ந்து, ஃபிலாரன்ஸ் ராஜ்யத்தின் சார்பாக அரசியல் தூதுவனாக வெளிநாடு செல்லும் அந்தஸ்தைப் பெற்றான்; பல ஆண்டுகள் வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் செய்ததன் விளைவாக நிறைய அனுபவம் பெற்றான். பல மன்னர்களுடனும், அரசியல் தலைவர்களுடனும் அரசாங்க அதிகாரிகளுடனும் அவனுக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. இதன் விளைவாக அரசியல் தத்துவம் (Political Philosophy) ஒன்று அவனுடைய உள்ளத்தில் உருவாயிற்று. அதுவே பிற்காலத்தில் 'தி பிரின்ஸ்' (The Prince) என்ற சிறந்த அரசியல் நூலாக மாக்கியவெலியால் எழுதப்பட்டது. 1502-ல் மாரியட்டா கார்சினி (Marietta Corsini) என்ற பெண்ணை மணந்து கொண்டான்.

போர்ஜியா என்கிற பெயருடைய பிரபுவின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக மாக்கியவெலி அனுப்பப்பட்டான். போர்ஜியாவின் துணிவும், செயலாற்றலும், தன்னம்பிக்கையும், பேராசையும் அதை நிறைவேற்ற அவன் புரிந்த சாகசங்களும் மாக்கியவெலியின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன. குறைவாகப் பேசி, ஆனால் நிறையக் காரியங்களைச் சாதித்த போர்ஜியா (Borgia) மாக்கியவெலியின் மனத்தில் அழியாத ஓவியமாகப் பதிந்தான். அந்த ஓவியம்தான் 'தி பிரின்ஸ்' என்ற நூலை மாக்கியவெலி எழுதிடக் காரணமாக அமைந்தது. மாக்கியவெலி தன்னுடைய நூலில் சித்தரிக்கும் இளவரசன் போர்ஜியாதான்!

ஃபிலாரன்ஸ் ராஜ்யத்தின் சக்தி வாய்ந்த மனிதனாக மாக்கியவெலி திகழ்ந்தான், பிரபல சிற்பியான மைகேலஞ்சலோ (Michelangelo) மாக்கியவெலியின் சிலையை வடிக்க எண்ணி, "உங்கள் உருவத்தைக் கையில் புத்தகத்துடன் வடிக்கட்டுமா?" என்றான். அதைக் கேட்ட மாக்கியவெலி சிரித்துவிட்டு, "கையில் புத்தகம் வேண்டாம்; வாளிருக்கட்டும்!" என்றானாம்.

அரசியல் அதிகாரம் கை நழுவிப் போகாமல் இருக்க ஒரு மனிதன் என்னென்ன செய்ய வேண்டும் என்பதை மாக்கியவெலி தெளிவாகச் சொல்லுகிறான். அரசியல் நெருக்கடிகளைச் சமாளிக்க விரும்புகிறவன் அறவழிகளைப்பற்றியெல்லாம் கவலைப்படக் கூடாது என்பது மாக்கியவெலியின் சித்தாந்தம்.

"மக்கள் நல்வாழ்வு வாழ, சில படுகொலைகளை அரசியல் தலைவர்கள் செய்தாலும் அது நியாயமானதே! லட்சியம் நல்லதாக இருந்தால் அதை நிறைவேற்றத் தீய செயல்களில் ஈடுபடுவதால் தீங்கில்லை; லட்சியம் நிறைவேறிய பின்னரும் அத்தீச்செயல்களைத் தொடர்ந்து கையாள்வதுதான் கண்டிக்கத் தக்கது. தீமை புரிந்தது நன்மையை நிலைநாட்ட —என்பதை மக்கள் உணர்கின்ற பொழுது அந்தத் தீமையை அவர்கள் பொருட்படுத்தமாட்டார்கள்.

"லட்சியத்தின் குறுக்கே நிற்பவர்களை ஒழித்துக் கட்டாமல் இருப்பது, சதா சர்வகாலமும் பயத்துடன் இருக்கச் செய்யும். அதனால் ஒரு அரசியல் தலைவன் ஆக்க வேலைகளில் ஈடுபடுவது தடைப்படும். தீமை புரிந்துதான் ஒரு செயலை நிறைவேற்ற வேண்டுமென்றால், அத்தீமையைத் திடீரென்று செய்து முடித்துவிட வேண்டும். அதனால் அதிர்ச்சிதான் ஏற்படுமேயொழிய அபாயமில்லை; சிறுகச் சிறுக தீமை செய்தால் மக்கள் சிந்தித்து வெறுக்கவும் ஆரம்பிப்பார்கள். ஆனால் நன்மைகளைக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் மக்கள் கொண்டுள்ள அன்பு மாறாமலிருக்கும்!

"ஒழுங்கீனம் வளர்ந்துள்ள இடத்தில் ஒழுக்கமுள்ளவன் நிலைத்து வாழவே முடியாது. ஆகவே அதிகார பீடத்திலுள்ளவன் தன் சூழ்நிலைக்கேற்ப வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

"அன்பினால் ஆள்வதைவிட பயத்தினால் ஆள்வதே மேல் அன்பு பிறன் நினைத்து உன்மீது' செலுத்துவது; பயம், நீ பிறனிடம் உண்டாக்குவது. ஆகவே உன்னால் உண்டாக்கப்படுகிற பயமே நம்பிக்கையான ஆயுதம்."

இப்படிப் பயங்கரமான தத்துவங்களைப் போதித்த மாக்கியவெலி 1520-ல் மாண்டுபோனான். கடைசிக் காலத்தில் அவன் சில ஆண்டுகளைச் சிறையிலேயும் கழிக்க நேரிட்டது.

"மாந்திரகோலா' என்ற நாடகம், 'கிளிசியா' என்ற நாவல், 'போர்க் கலை' என்ற நூல், 'ஃபிலாரன்ஸ் நாட்டு வரலாறு' ஆகியவை அவன் எழுதிய வேறு நூல்களாகும்.

'மாக்கியவெலி' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு அரசியல் பித்தலாட்டக்காரன்என்பது பொருள். ஆங்கில மொழியில் அவனுடைய பெயரின் அடிப்படையிலேயே இரண்டு சொற்கள் வழங்குகின்றன.

இத்தாலி ஒரு நாடாக இணைய வேண்டும்; பலம் பொருந்திய இத்தாலியப் படையால் பாதுகாக்கப்படவேண்டும் என்பவை அவன் கண்ட கனவுகள். அவன் கனவுகள் பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் நிறைவேறின.

மாக்கியவெலியின் கொள்கை பற்றிக் கருத்து வேற்றுமைகள் இருக்கலாம்; அவன் ஒரு தலைசிறந்த அரசியல் மேதை என்பதைப்பற்றிக் கருத்து வேற்றுமைகள் இருக்க முடியாது.

அன்புள்ள,

அகத்தியன்.



(2) இது உள்ளே... ...இது வெளியே!

வெள்ளி 29—5—59 சென்னை

ஓட்டை வண்டியில் உல்லாசப் பயணம்!

உள்ளத்தில் ஆயிரம் புகைச்சல் இருக்கலாம்; அத்தனையும் எள்ளத்தனையும் மிச்சமின்றித் துரத்தவும்படலாம்; வெல்லத்தை நிகர்த்த மயக்கு மொழியினால்! நெஞ்சிலே கப்பிக் கிடக்கும் அச்சத்தை நமக்கு நாமே விரட்டிக்கொள்ள முடியும் — 'ஆறுதல்' என்ற முலாம் பூசப்பட்ட அழகான மொழியினால்!

ஆனால், அந்தப் புகைச்சலும் அச்சமும் இருதயத்தின் எங்கேயோ ஒரு கோடியிலே முடங்கிக் கிடக்கத்தான் செய்யும், தருணம் வாய்க்கும்போது தன் சுய ரூபத்தைக் காட்ட!

அதுபோலத்தான் இந்திய உப கண்டத்து ஆட்சிச் சக்கரத்தை இயக்குபவர்கள்—ஓட்டை வண்டியிலே உல்லாசப் பயணத்தை மேற்கொண்டவர்கள், "இந்த வண்டி எவ்வழிதான் போகுமோ? இடைப்படும் எதிர்ப்புகளை எப்படித்தான் சமாளிக்குமோ? உடைந்துவிழும் பகுதிகளை; ஊழலால் ஏற்பட்ட கேடுகளை எவ்விதம்தான் ஈடு செய்யுமோ?" என்ற புகைச்சல் ஏற்படுகிற நேரத்தில்; அச்சம் அண்டுகிற சமயத்தில்—தமக்குத் தாமே ஆறுதல் அடைய மயக்கு மொழிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள்! அந்த வண்டியிலே பயணம் நடத்துகின்ற நாற்பது கோடி மக்களின் கண்களையும்கூட "திட்டங்களும் பலனும்" என்ற 'மாயத் திரை'யால் மறைக்கிறார்கள்! அந்தத் திரைக்குப் பின்னால் சுந்தரச் சோலை தெரிகிறது; சுவைமிக்க வாழ்வு தெரிகிறது; எழிலும் பொலிவும் குதித்தாடும் புது உலகமே தென்படுகிறது!

ஆனால், அத்தனையும் என்றென்றைக்கும் 'மாயத் தோற்ற'மாகிவிடுமோ என்ற அச்சத்தைத்தான் அரசியல் வட்டாரத்திலிருந்து இன்று வருகின்ற செய்திகள் ஏற்படுத்துகின்றன.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைந்து விட்டது; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் மூன்று வயதுக் குழந்தையாகிவிட்டது; அதற்குள் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிப்பதற்கான ஆக்கவேலைகளில் ஈடுபட்டு விட்டார்கள், திட்டக் குழு நிபுணர்கள், மிகவும் சுறுசுறுப்புடன்!

ஆனால், அந்தோ பரிதாபம்! **1960** கோடி ரூபாயை விழுங்கிய முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தால் விளைந்த பலன் என்ன என்பதைக் காட்டுவோரில்லை; வழவழப்பான மேல் நாட்டுக் காகிதத்தில் அச்சடிக்கப்பட்ட புள்ளிவிவரங்களைத் தவிர!

அதைவிடக் கேவலம் இது....இரண்டாவது திட்டம் துவங்கி மூன்று வருடங்கள் ஓடிவிட்டன! ஆனால், இதுவரை முதலாண்டு கால' சாதனைபற்றியோ—அல்லது குறைபாடுபற்றியோ இதுவரை ஒரு எழுத்துக்கூட வெளிவரவில்லை. மத்திய அரசு நோக்கி மாநில அரசுகள் அத்தகைய குறிப்புகளைக் கேட்டுக் கொண்டேயிருக்கின்றன. இவ்வளவுக்கும் பிறகு இப்போதுதான் அத்தகைய அறிக்கைகள் தயாரிப்பதை மேற்பார்வையிட தனிப்பட்ட அதிகாரி ஒருவரையே நியமிக்க முடிவு செய்திருக்கிறார்கள், வேகத்தில் ஆமையைப் போட்டிக்கிழுக்கும் அரசினர்!

இந்தக் கேடுகெட்ட நிலையிலேதான் 'பிரம்மாண்ட'மான மூன்றாவது திட்டத்தைப்பற்றி ஆலோசிக்கத் துவங்கிவிட்டார்கள்! அது உண்மையிலேயே மிகவும் 'பிரம்மாண்டமான' திட்டமாகத்தான் இருக்குமாம். அதாவது மூன்றாவது திட்டச் செலவை **11,000** கோடி ரூபாய்க்கு உயர்த்தியிருக்கிறார்கள்!

திட்டங்கள் பலவற்றைத் தீட்டி—பலன்களையும் எழுதிக் காட்டி—அதற்குத் தேவை இவ்வளவு என்று கணக்குக் காட்டிவிட்டால் போதுமா? அந்தத் தொகையைச் செலவிட பணத்திற்கு எங்கே போவது? கடன் கொடுப்பார் கொடுத்தாலும், வரி தருவோர் தட்டாது தந்தாலும், துண்டு விழுகிறதாம், தொகையில்! ஆகவே இந்நாட்டு ஏழை மக்களின் தலையிலே பேரிடி தாக்கிவிட்டதோ என்று நடு நடுங்கத்தக்க செய்தி ஒன்றையும் தந்திருக்கிறார்கள்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானால் ரூ. **2000** கோடிக்குப் புதிய வரிகள் விதிக்கத்தான் வேண்டும்—என்று திட்டமான கருத்தையும் வெளியிட்டுவிட்டது, அந்த நிபுணர் குழு!

அரசியல் வட்டாரத்திலே மாபெரும் அதிர்ச்சியைத் தந்திருக்கிறது, இந்தச் செய்தி! இரண்டாவது திட்டம் நிறைவேற்றுவதற்கு **800** கோடி ரூபாய் புது வரிகள் மூலம் கிடைக்க வேண்டும் — என்ற செய்தியாலேயே திட்டங்களைச் சபிக்கத் துவங்கியிருக்கிறார்கள், வரி கொடுத்துத் துவண்டுபோன மக்கள்!

மீண்டும் இப்படியொரு புதுக் கணையா? இதன் முடிவு என்னதான் ஆகுமென்று ஏக்கத்தோடு கேட்கிறது, ஏழையர் உலகம்!

இத்தனைக்கும் மத்திய அரசு விதித்திருக்கும் வரிகள் கண்டு பொருளாதார அறிஞர்களே வியப்படைந்து போகிறார்கள். உலகத்திலேயே இந்த மட்டும்தான் வருமான வரியும், மேல் வரியும் அதிகமாக வசூலிக்கிறார்களாம்!

பொருளாதார அறிஞர் கால்டர் குறிப்பிடுகிறார்: செல்வ வரியும் செலவு வரியும் விதிக்கின்ற எந்த நாட்டிலும், வருமான வரியும் மேல் வரியும் **45** சதவீதத்திற்குமேல் இருப்பது கிடையாது. ஆனால் இந்த நாட்டில் ஊதியத்தின்மேல் வருமான வரி **75** சதவீதம் இருக்கிறது; பிற வருமானமானால் **84** சதவீதம் வரி விதிக்கப்படுகிறது! எவ்வளவு சுமத்தினாலும் வரி கொடுக்கும் வலுவுள்ள சீமான்களிடம் வேண்டுமானால் பறிக்கலாம். ஆனால், ஏதுமற்றவர்கள் பாதிக்கப்படும் நிலையும் தவிர்க்க முடிவதில்லையே!

இப்படி அளவுக்கு மீறிய வரிகளை விதித்துத் திட்டங்கள் போட வேண்டியது அவசியம்தானா? ஏட்டிலே மட்டும் 'வளர்ச்சியின் வேக'த்தைக் காட்டி விட்டால் போதுமா? பலனை எதிர்பார்த்து ஏமாந்த மக்கள் இனியும் இந்தக் கொடுமையை அனுமதிக்கவே மாட்டார்கள்!

ஆகவே, அரசினர் தங்களையே ஏமாற்றிக்கொள்ளாமல் 'பிரம்மாண்டமான' திட்டங்களைத் தீட்டுவதைத் தவிர்க்க வேண்டும்! அதற்காகக் கண்களை மூடிக் கொண்டு வரி விதிப்பதை ஒழிக்க வேண்டும்!

ஓட்டை வண்டி கட்டுமீறி ஓடினால் உருண்டுவிடும்; உருக்குலைந்து போய்விடும் என்றுதான் நாட்டு நலனிலே அக்கறை கொண்ட நாமும் எச்சரிக்க விரும்புகிறோம்! ஃ



பேனா ஓவியம்... [அடுத்த பக்கம்]

தேரோட்டம் ஏன் உனக்கு- ★ தியாகராசா ? ★

ஆயிரங்கள் ஐநூறு தேவை!

"பழமைக்குக் காவடி எடுக்கும் பக்தர்களே! பகவான் சேவடி தொழுகின்ற அடியார்களே! அள்ளி அள்ளிக் கொடுங்கள், வெள்ளிக் காசுகளை!" — இப்படி அறைகூவல் எழுகிறது, திருவாரூர் நகரத்திலிருந்து!

கரங்கள் நீளுகின்றன, காசு படைத்தோரை நோக்கி! வள்ளல்கள் வாழ்ந்தநாடு இது; எனவே வரலாற்றை மாற்றி அமைத்து விடாதீர்கள்—என்று வேண்டுகோள் வேறு பறக்கிறது!

ஆயிரங்கள் ஐநூறு......அப்பப்பா! ஐந்து இலட்சங்களாம் —அவசரமாகத் தேவையாம்!

"ஏன்? ஏன்?" என்று கேட்கின்றன, இந்த நாட்டுப் பசிக் கூட்டம்!

வீடற்றோம்; விழிகள் வற்றினோம்; பழிதீர்க்கப் பாய்ந்து வரும் வறுமையை விரட்ட கையிலே வலுவற்றோம்! எம் துயர் துடைக்கத்தான் தூயவர்களே; புறப்பட்டீர்களா?—என்று கேட்கிறீர்களா, தோலாடை போர்த்திய எலும்புக் கூடுகளே!

இல்லை; இல்லை!

கொசுக் கூட்டங்கள் பிறப்பெடுக்கும் சாணிமேட்டிலே—விஷக் கிருமிகளை விருத்தி செய்யும் சாக்கடைக் கால்வாயிலே—கண்களுக்கு ஈடான குழந்தைச் செல்வங்களோடு காற்றையே உண்டு காலங்கழிக்கும் சோகப் பரம்பரையே! உன்னை விரட்டி வரும் சாவைத் துரத்தத்தான் குவிகிறது பணம்—என்று கருதுகிறாயா?

இல்லை; இல்லவே இல்லை!

நீங்கள் வாழ்ந்தால் யாருக்கென்ன; அல்லது வீழ்ந்தால்தான் இந்தப் பாருக்கென்ன நட்டம்?

தூப தீப நைவேத்தியத்தின் நாற்றத்திலே — சந்தன மணம் கமழும் வாசனையிலே — உங்கடைய பசி வேதனை கலந்த மூச்சுப் படுவதே 'பாப'மாயிற்றே! ஆண்டவன் திருப் பவனி வருகின்ற தேரோடும் வீதியில் தேம்பியழும் 'அசுத்தங்'களே—உங்களுடைய பாதம் படுவதுகூட பயங்கரமான குற்றமாயிற்றே!

ஆகவேதான் எச்சரிக்கிறோம், அற்ப ஆசைக்காரர்களே! அந்த ஐந்து இலட்சத்தில் ஒரு சல்லிக் காசும் உங்கள் சல்லடைக் கண்களாகிவிட்ட வாழ்வுக்கு ஈடு செய்ய அல்ல!

அதோ...ஐந்து வேலி பரப்புள்ள கோயிலைத் தன் மாளிகையாகக் கொண்டிருக்கிறாரே; ஒரு கோடீஸ்வரர்—பொன்னும் மணியும் மின்னும் வைரமும் பதித்த அணிகலன்கள் உடலை அலங்கரிக்க—சந்தனப் புகைக்கிடையே அர்ச்சகரின் ஓலத்திற்கிடையே—அசையாது வீற்றிருக்கிற வெங்கலச் சிலையாம்—'வீதி விடங்க'ராம்—'திருவாரூர்த் தியாகராசர்' —அவருக்குத்தான் அந்த ஐந்து இலட்சங்கள்!

ஒண்டுவதற்கு ஒரு 'பொந்து'மின்றி ஊரிலே தவிப்போர் பலர் இருந்தாலும், மைதானம்போல் விரிந்து கிடக்கும் ஐந்து வேலி நிலமுண்டு, அவரது கோயிலிலே! அங்கே தேவாசிரிய மண்டபம், பக்த காட்சி மண்டபம், சபாபதி மண்டபம், ஊஞ்சல் மண்டபம், வசந்த மண்டபம்— இப்படித் தனித்தனி மண்டபங்கள் வேறு உண்டு, காலத்திற்கேற்ப ஓய்வெடுக்க!

அவரது திருமேனியை அலங்கரிக்கும் செங்கழுநீர் பூ மலர, ஐந்து வேலி நிலப் பரப்பிலே தனியான ஓடையுண்டு—அங்கே சேற்று வாடையுண்டு!

தியாகராசர் திருநீராட குளம் உண்டு கோவிலுக்கு எதிரே—அதுவும் ஐந்து வேலி நிலப் பரப்பிலே!

இவைமட்டுமல்ல! சிரித்து மகிழாத அந்தச் சிலைக்கு சிங்காரிக்க அடப்பைக்காரர்கள் உண்டு! உண்டு ருசிக்கத் தெரியாத உருவிற்கு உணவு படைக்க அன்னதானக் கட்டளை உண்டு! அணி மணிகளும், அலங்காரப் பந்தலும் உண்டு! தூக்கிக்கொண்டு கூத்தாடதொண்டர்களும், பாடிக்கொண்டு புகழ் சேர்க்கப் பாடகர்களும் உண்டு!

இத்தனையும் இருந்தென்ன; இனியும் ஐந்து இலட்சங்கள் தேவையாம்! ஆண்டவர் கேட்டாரில்லை; அவரை அண்டி வாழும் அடியார்க் கடியார்கள் உண்டியல் எடுத்துப் புறப்பட்டு விட்டார்கள்!

பக்தர்களிடம் 'பிச்சை'ப் பாத்திரம் ஏந்தி வரக்கூடிய அளவுக்கு அந்தப் பகவானுக்கு இப்போது என்ன குறை நேரிட்டுவிட்டது?

தேவர்களின் குறைகளையே தீர்த்தவராயிற்றே அவர் — ஆமாம்; அவரது கதை இதோ:

தனக்குக் குழந்தை பிறக்க வேண்டு மென்பதற்காக திருமால் சோமாஸ்கந்தமூர்த்தியை வழிபட்டு வந்தார். அப்போதுதான் ஒருநாள், பின்னங்கால் பிடரியில் இடிபட தேவர் கோனாகிய இந்திரன் ஓடோடி வந்தான். வாற்கலி என்கிற அசுரன் கையில் வாளெடுத்து வந்து விட்டானும், தேவ மாதர் புடைசூழ இன்பம் ருசித்துக் கொண்டிருந்தபோது! ஆகவேதான் ஆதரவு தேடி வந்து விட்டான், அந்த அந்தரத்தில் அசோச்சும் இந்திரன். அவன் நிலை கண்டு இரங்கிய திருமால் தன்னிடமிருந்த சோமாஸ்கந்த மூர்த்தியை இந்திரனிடம் தூக்கிக் கொடுத்து விட்டார். இந்திரனும் அவரைப் பூசித்து வந்தான்; அந்தப் பூசாபலத்தால், அசுர சேஷ்டைகளும் ஒழிந்துவிட்டன!

சிறிது காலம் கழித்து மற்றுமொரு அசுரன் — வாலாசுரன் என்ற பெயருடையோன் இந்திரனிடம் வாலாட்ட வந்து விட்டான். இந்த முறை சோமாஸ்கந்தமூர்த்தி எந்த நாட்டுக்கு அவசர வேலையாகப் போயிருந்தாரோ தெரியவில்லை; இந்திரன் பூலோகத்திலிருந்த முசுகுந்த சக்கரவர்த்தியின் தயவை நாடினன். அந்த மன்னரும் எத்தகைய படை எடுத்து — எந்த வழியே தேவலோகம் வந்தாரோ தெரியவில்லை; அந்த அசுரனை வெற்றிகண்டு, விரட்டி விட்டார்!

காளிக்குக் கடா வெட்டுவதும், பகவானுக்குப் பழம் படைப்பதும் ஏன்? கருணைக்குக் கடவுளர் உலகமே காணிக்கை கேட்பதனால்தானே! ஆகவே அந்தப் பூலோக மானிடப் பிறவியான முசுகுந்த சக்கரவர்த்தி சும்மா இருப்பாரா? இந்திரனைத் தாக்கிய அசுரனை விரட்டியதற்காக அவர் இந்திரனிடம் காணிக்கை ஒன்று கேட்டார். அதாவது, இந்திரன் பூஜித்து வந்த சோமாஸ்கந்தமூர்த்தியே வேண்டும் என்று கேட்டுத் தொலைத்து விட்டார்! இந்திரனுக்கோ அவரை இழந்துவிட மனமில்லை. ஆகவே, எப்படியாவது முசுகுந்தரை ஏமாற்றி வஞ்சித்திட வேண்டுமென்று கருதி, சோமாஸ்கந்தமூர்த்தியைப்போல் ஆறு உருவங்களைச் செய்து அவருக்குக் கொடுத்தான். அவை எல்லாமே 'டுப்ளிகேட்' என்பதை கடவுள் கிருபையால் உணர்ந்து கொண்டார் முசுகுந்தர். ஆகவே வேறு வழியின்றி இந்திரன் உண்மையான சோமாஸ்கந்தரையே முசுகுந்தருக்குக் கொடுத்து விட்டான்! அவனே சோமாஸ்கந்தமூர்த்தியைத் தூக்கிக் கொண்டு பூலோகத்திற்கு வந்து திருவாரூரிலே குடியேற்றினன். அந்த சோமாஸ்கந்த மூர்த்திதான் இன்றைய 'திருவாரூர்த் தியாகராசர்'!

இப்படிப் பிறப்பிலேயே பல சூதுக்களைக் கொண்டிருக்கிற தியாகராசருக்கு இன்று ஐந்து இலட்சங்கள் தேவைப்படுவானேன்? பணம் கேட்டு வருகின்ற பக்த கோடிகள் தருகிறார்கள்; விளக்கம்:

ஓடாத தேர் இனி ஓட வேண்டுமாம்! பனிரெண்டு ஆண்டு காலமாகப் பழுதடைந்து கிடக்கின்ற தேர் செப்பனிடப்பட்டு, திருவாரூர் ரத வீதிகளிலே உலா வர வேண்டுமாம்!

—அதற்குத் தேவை மூன்று இலட்சங்கள்!

தெப்பம் மிதந்த திருக்குளம் இன்று பாசி தேங்கும் குட்டையாகிவிட்டது! ஆகவே பாசி களையப்பட்டு, பகவான் தெப்பத்தில் திருப்பவனி வர வேண்டுமாம்!

—இதற்குத் தேவை இரண்டு இலட்சங்கள்!

புதிய சமுதாயத்தைப் புன்முறுவலுடன் வரவேற்கும் நாட்டினரே! நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள்! 12 ஆண்டுகள் நின்றுவிட்ட தேர், இனி அடுப்புக்கு விறகாவதைவிட, மூன்று இலட்சங்களை விழுங்கி உலா வர வேண்டுவது அவசியமா?

தேர் நகர்ந்த அந்தத் திருப்பாதையில் இன்று என்ன கேடு வந்து விட்டது?

பாம்புகள் நெளிகின்றனவா? அல்லது தீப்பாகு ஓடுகின்றதா?

"என்னைத் தேரிலே ஏற்றி இழுத்து வாருங்கள்; அல்லது நெற்றிக் கண்ணை இரவல் பெற்றுச் சுட்டுப் பொசுக்கி விடுவேன்!" என்று இந்திரனை ரட்சித்த அந்த தியாகராசர்தான் அச்சுறுத்தினரா?

பதினாயிரம் ஏழைகள் அந்தப் பெருந்தேரை இழுப்பார்களாம்; பொசுக்கும் வெய்யலில் வெள்ளமாய்ப் பாயுமாம், வியர்வை; சக்கரத்திலே சிக்கி மடிந்தோரின் இரத்தப் பெருக்கும் அதிலே கலக்குமாம்; அந்தக் கொடிய நதியிலேதான் நீந்தி வருவாராம் பஞ்சாமிர்த மழைக் கிடையே மறைந்து கிடக்கும் தியாகராசர்!

அவசியம்தானா? இப்படித்தான் இன்று அறிவுலகம் கேட்கிறது!

நீதி வழுவாதவன் தானென உணர்த்த தேர்க்காலில் மகனை விட்டறைத்த மனுநீதிச் சோழன் வாழ்ந்த சோபுர் தலைநகரிலே, மீண்டுமொரு முறை நீதி சாக வேண்டாம்!

துன்புற்றோர் அவலக் கதை கேட்க ஆராய்ச்சி மணி ஒலித்த மண் அது; அங்கே துயருற்றோர் நிலைமாற்றப் பாடுபடாத ஐந்து இலட்சங்கள் பாழாக வேண்டாம்!

ஆகவே, ஆண்டவன் விழா நடத்தத் துடிப்போரே! உங்கள் விழிகளைத் திறவுங்கள்! இந்த நாட்டை ஆண்ட இனத்தாரின் அவலம் துடைக்கப் பாடுபடுங்கள்! நாடு வாழ்த்தும்!

—சொர்ணம்

'விடுதலை'யே; விடை என்ன?

"பார்ப்பான், பத்திரிகை, அரசியல் கட்சி, தேர்தல், சினிமா—இவை ஐந்தும் நோய்கள்!"

இப்படி தினம் தினம் 'விடுதலை' ஏட்டிலே கொட்டை எழுத்துக்களில் படிக்கிறோம்.

ஆகவே ஒரு சந்தேகம்...

- பார்ப்பான் நோய் என்றால், பொதுத் தேர்தலிலே, உங்கள் மொழிப்படியே எத்தனையோ 'பார்ப்பான்'களை ஆதரித்தீர்களே; அதற்கு என்ன பொருள்?
- பத்திரிகை நோய் என்றால், 'விடுதலை'யையும் அந்தப் பட்டியலில் சேர்த்துவிடச் சொல்கிறீர்களா?
- அரசியல் கட்சியும் நோயா? அத்தகைய கட்சியாகிய காங்கிரசிற்காகப் புயல் வேகப் பிரச்சாரம் செய்திருக்கலாமா நீங்கள்?
- தேர்தலை நோயென்று எழுதுகிறீர்களே; சுயேச்சைகளாகத் தேர்தலில் நின்று வெற்றியும் தோல்வியும் பெற்றிருக்கிறார்களே அநேக திராவிடர் கழகத்தார்—அதற்கென்ன சொல்கிறீர்கள்?

பெண் சிங்கம் பிரிந்தது!

எஸ். வி. லிங்கம்

பெண் சிங்கம் நம்மை விட்டுப் பிரிந்தது!

தமிழ் வாழ தான் வாழ்ந்தவர்- தமிழ்தழைக்க தான் உழைத்தவர்- நம்மை எல்லாம் தவிக்கச் செய்து விட்டு "சென்று வருகிறேன், என் செல்வங்களே!" என்று மறைந்து போனார்கள்!

காலமெல்லாம் தொண்டின் அடிச்சுவட்டிலேயே நடைபோட்டார்கள்; சங்க காலத் தமிழ்ப் பெண்டிர் சாகவில்லை இன்னும் என்று எடுத்துக் காட்டினார்கள்; வீராங்கனையாய் — வெற்றித் தேவியாய்—எழுபதாண்டு காலம் சுடர் விளக்காய் ஒளிவிட்டார்கள்! இன்று அத் தீபம் அணைந்தது; இருந்தாலும் தீமைகள் பலவற்றை எரித்துப் பொசுக்கிவிட்டுத்தான் ஓய்ந்தது!

உலகைத் திருத்திய உத்தமர்கள் ஆயிரக் கணக்கிலே தோன்றியிருக்கிறார்கள்; ஆனால் 'உலகத்தைத் திருத்திய உத்தமி'களின் பட்டியலை விரல்விட்டு எண்ணி விடலாம். அதிலும் பழைமைப் பைசாசம் கோரநர்த்தனம் புரிந்து கொண்டிருந்த தமிழகத்தில், அப்படியொரு தாய்க்குல மங்கை தலையெடுத்தது வியப்பிலும் வியப்புதான்; அதனால்தான் இழப்பிலும் பேரிழப்பு என்று இன்று ஏங்கித் தவிக்கிறது, 'தருமாம்பாள் அம்மையாரை'ச் சாவுக்கு இரையாக்கிவிட்டு நிற்கின்ற தமிழகம்!

மனித சமுதாயத்தின் தவிர்க்க முடியாத இயற்கை நிகழ்ச்சிகளே பிறப்பும் இறப்பும்! ஆனாலும் இடைப்பட்ட வாழ்வுக்காலத்தில், எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளதான் இறந்த பின்னும் புகழ் சேர்க்கும் தன்மை படைத்தவைகளாக இருக்கவேண்டும்!

பிறந்தவர் சாகலாம்; ஆனால் பெற்றெடுத்த புகழும் சாகக் கூடாது!

அதுபோல் அம்மையாரின் புகழ் சாகாது; அவர் காட்டிவிட்டுப் போன பாதை மறையாது; அவர் வளர்த்துவிட்ட செல்வங்கள் பெரும் புகழ் சேர்க்காது ஓயார்!

நான் 'ஆரூடம்' சொல்கிறேன்; ஏனென்றால் ஆண்டுகள் பலவாக அம்மையாருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புகள் பெற்றவன் நான்! இந்த நேரத்தில்— இறுதிப் பயணம் மேற்கொண்டுவிட்ட அத் தமிழ்த்தாயின் வீரச் செயல்களை எழுதிடத் துடிக்கின்றது என் கரம்!

* * *

● அம்மையாரின் செயல்களில் புயலின் வேகம்இருக்கும்;பழையன கழிந்து புதியன காண வேண்டும் என்கிற துடிப்பு ஒவ்வொரு மூச்சிலும் கலந்து வெளிப்படும்! அவர்களுடைய ஆற்றல் அது; ஆர்வம் அது!

இரு வாரங்களுக்குமுன் அவர்களைச் சந்திக்கச் சென்றேன், வீட்டிற்கு. நான் எதிர்பார்த்துச் சென்றதைவிட நிலைமை மிக மோசமாக மாறிவிட்டிருந்தது. எதையும் தாங்கும் இதயத்தைக்கொண்டிருந்த அந்த உடற்கூடு செயலற்று—சிரிப்பற்று— சிறப்பற்று—முடங்கிக் கிடந்தது!

ஓராண்டு காலமாகவே படுக்கையில் கிடக்கிறார்கள்; பேசும் சக்தியோ நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வந்திருக்கிறது. சாடையாலும். மெல்லிய குரலாலுமே தான் நினைத்ததைச் சொல்லும் நிலைக்குச் சென்றுவிட்டார்கள்!

என்னைக் கண்டதும், "வா, லிங்கம்! கன்னியம்மா சௌக்கியமா?" என்றார்கள், பரிவுடன்!

மற்றவர் காதுகளுக்கு அக்குரல் விழுந்திருக்க முடியாதென்றே கருதுகிறேன். அத்தனை மெல்லிய ஓசை! ஆனாலும் அதிலே இழையோடிய அந்தப் பரிவு... ...பாசம்....குடும்பப் பிணைப்பு... இனியொரு குரல் அப்படிக் கேட்குமா என்று என் இதயம் விம்முகிறது!

"லிங்கம்! நம்ப கார்ப்பரேஷனைப் பிடித்துவிட்டோம்! எனக்கு ஒரே மகிழ்ச்சி!"

—உடல் நிலை அனுமதித்திருந்தால் அந்தத் தளர்ந்துபோன உடல் ஒரு முறை எழும்பிக் குதித்திருக்கும். மகிழ்ச்சியின் காரணத்தால் என்று நான் நினைத்தேன்!

மீண்டும் பேசினார்கள், அந்தப் பேச்சின் பொருள்—அவர்கள் ஆர்வம் எத்தனை வேகமாக எதிர்காலத்தில் பாய்கிறது என்பதை எடுத்துக் காட்டிற்று!

"கார்ப்பரேஷன் கிடைச்சுட்டுது! ஆனால்.... நம்ப அண்ணாவை என்றைக்கு மந்திரியாகப் பார்ப்பேன்?...நிச்சயம் அது மந்திரியா வந்துடும்...ஆனால், நான் தான் இருந்து பார்க்க முடியாது. பார்க்கவே முடியாது!"

—சுழன்று கொண்டிருந்த விழிகள் இரண்டும் சற்று நேரம் மூடிக் கொண்டன. இமைக் கதவுகளிலிருந்து வெளிப்பட்ட இரண்டு துளிக் கண்ணீர் என் இதயத்தை வேல் கொண்டு தாக்குவதுபோல் உணர்ந்தேன். 'அம்மா! உன் ஆர்வம் — உன் ஆசை ஒருக்காலும் வீண் போகாது! உன் தூய்மை நிறைந்த இதயத்தின் ஆசைகளுக்குத் தமிழகம் துரோகம் செய்துவிடாது!' என்று வாய் விட்டுக் கதறவேண்டும் போலிருந்தது எனக்கு — அடக்கிக் கொண்டேன்.

"அம்மா! நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்? நீங்கள் அவ்வளவு சீக்கிரம் பிரியமாட்டீர்கள்! அண்ணா மந்திரியாகி, அவருக்கு மாலை போட்டு வாழ்த்திய பிறகுதான் உங்கள் மூச்சு அடங்கும்!"

—நான் இப்படிச் சொன்னதும் அந்த முகத்திலே ஒரு பொலிவைக் கண்டேன்; ஒரு அமைதியைக் கண்டேன்!

அதே அமைதியைத்தான் ஒரு வாரத்திற்குப் பிறகு உயிர் பிரிந்த அந்த உடலின் முகத்திலும் கண்டேன்; அதே பொலிவைத்தான் அந்த இடுகாட்டுப் பயணத்தின்போதும் கண்டேன்!

ஆமாம்; மரணத்தின்போதுகூட தம் புதல்வர்கள், மக்கள் மன்றத்தின் செல்வாக்குக்கு இலக்காகிவிட்டதை எண்ணிக் கொண்டுதான் இருந்திருக்கும் அந்தத் தொண்டுக் கிழவியின் உள்ளம் — என்றுதான் நான் கருதுகிறேன். அத்தகைய உன்னதக் காட்சியைக் காணமல் தன் கண்கள் மூடிக் கொள்ளக் கூடாது என்று எப்படியெப்படி எல்லாம் போராடினார்களோ தன்னை நெருங்கிக் கொண்டு வந்த இயற்கையின் முடிவுடன்!

* * *

● போராடத் தயங்காத வலுவான இருதயம் அம்மையாருடையது; எதிரியின் பாசறைக்குள்ளேகூட புகுந்து புறப்படும் துணிவு பற்றவர்கள் அவர்கள்!

சென்னை மாநில சட்ட சபையில் 'பொட்டுக் கட்டுதலை ஒழிக்கும்' மசோதாவை டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி கொண்டுவந்த சமயம் அது!

தாய்க்குலத்தின் ஒரு பகுதியை மட்டும் சாக்கடை ஓரத்திலேயே வாழச் செய்ய வேண்டும்; சமுதாயத்தின் முன்னே தலை குனிந்து நடமாடச் செய்ய வேண்டும் — என்று விரும்பிய இம் மாகாணத்தின் ஒரு தனிப் பகுதி அந்த மசோதாவை எதிர்த்தது! காலம் சென்ற திரு. சத்தியமூர்த்தி அவர்கள் இந்த எதிர்ப்பு அணியின் தலைவராக இருந்தார். அத்தகைய பிரமாண்டமான எதிர்ப்பைக் கண்டு முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் சந்தேகித்த நேரத்தில், அவர் சஞ்சலத்தைப் போக்க வந்தார்கள், டாக்டர் தருமாம்பாள் அம்மையார்!

காலஞ்சென்ற திரு. வி. கல்யாணசுந்தரனார், பெரியார் ராமசாமி, மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத்தம்மையார் — ஆகியவர்களுடன் தருமாம்பாள் அவர்கள் போர்க்களம் நோக்கிச் செல்லும் வீராங்கனையைப்போலப் புறப்பட்டார்கள். அப்போதுதான் அம்மையாருக்கு சென்னையில் எத்தகைய செல்வாக்கு இருந்தது என்பதை என்னால் உணர முடிந்தது! முத்துலெட்சுமி ரெட்டியின் அந்த மசோதாவுக்கு அவர்கள் ஆதரவு தேடி வீடு வீடாக ஏறி இறங்கினார்கள்.

இன்று பெண்கள் நல சேவையின் பெயரால் மாதா மாதம் 1000, 500 என்று செலவுக்குப் பணம் பெற்றுக் கொண்டிருக்கிறவர்கள் எத்தனையோ பேர் அன்று தாய்க் குலத்தின் வைரிகளாக இருந்தனர்! இன்று பெண்களின் பாதுகாப்புக்குப் பாடுபடுவதாகச் சொல்கிறவர்கள் அன்றைய தினம் சத்தியமூர்த்தியின் கைக்குள்ளே கிடந்தார்கள்! முத்துலட்சுமி ரெட்டியை எதிர்த்து— 'பொட்டுக் கட்டும்' வழக்கத்தை ஆதரித்து — தினசரி ஏடுகளில் கட்டுரைகள்கூட எழுதினார்கள்!

அத்தனை சீமாட்டிகளின் 'வீட்டுக்கும் தருமாம்பாள் அம்மையார் எங்களை அழைத்துச் செல்வார்கள்! 'பெண் குலத்தில் பிறந்துவிட்ட பாவிகளே! நம்முடைய உடன் பிறவா சகோதரிகள் ஊருக்குப் பொதுப் பண்டமாய் வாழ வேண்டுமென்றா விரும்புகிறீர்கள்?' என்று உரிமையோடு கண்டிப்பார்கள்!

அவர்கள் 'இருதலைக் கொள்ளி எறும்பா'கிவிடுவார்கள்! தங்களது பரிதாபகரமான நிலையை எடுத்துச் சொல்வார்கள். 'பண உதவி செய்கிறோம்; மறைமுக ஆதரவும் தருகிறோம்' என்றெல்லாம் அம்மையாரிடம் கெஞ்சுவார்கள.

பெண்களிடம் மட்டும்தான் என எண்ணி விடாதீர்கள்; சத்தியமூர்த்தியின் அணியிலிருந்த பெரிய மனிதர்களின் வீடுகளில் எல்லாம்கூட அம்மையாரின் குரல் ஒலித்திருக்கிறது! பெருந்தனக்காரர்களின் மாளிகைகளிலும் அவர்களது 'கணீர்' என்ற கண்டனக் குரல் எழும்பியிருக்கிறது!

'அம்மையார் தன்னை வரவேற்கின்ற பெரிய மனிதர்களின் இல்லங்களைத் தேடி ஓடினார்கள்; தன்னை விரும்புகின்ற குடும்பங்களை நெருங்கினார்கள்; தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தினார்கள்—ஆனால் சுயநலத்திற்காக அல்ல; சமூகம் சீர்திருத்த வேண்டும் என்ற பேராசை—அவர்களுடைய குடும்ப

[தொடர்ச்சி பக்கம்—8]

பைத்தியக்காரர்களின் செயல்களுக்குப் பொருளில்லை! ஆனால் சுயபுத்தியுள்ளவர்களின் 'பைத்தியக்காரத்தனமான' செயல்களுக்கு என்ன காரணம்?

இந்தப் புதிருக்கு விடை தரும்

எண்ணப் பின்னணி

"முத்தாரம்" இதழ் 27-ல் இடம் பெறுகிறது!

ரோமாபுரிப் பாண்டியன்

மு.கருணாநிதி

பேரரசர்களின் அணைப்பிலே அகமகிழ்ந்த புலவர் பெருமான், 'தமிழ் வாழ்க!', 'தாயகம் மென்மேலும் வெற்றி பெறுக!' எனத் தழுதழுத்த குரலில் கூவினார். அவரது கண்கள் அவரையும் அறியாமல் குளமாகி விட்டன. "என்னுடைய பலநாள் ஆசை இன்று நிறைவேறியது. பாண்டியரும் சோழரும் என்றைக்குப் பகைத்துக் கொள்வார்கள்; நேரம் பார்த்துப் போர் தொடுக்கலாம் என ஏங்கிக் காத்திருக்கும் வேளிர் குடித் தலைவர்களும், ஒரி நாகர்களும், இடை நிலங்களில் வாழும் பொதுவரும் இந்த நாள் விழா நிகழ்ச்சி கேட்டு ஏமாற்றத்தைத் தழுவிக் கொண்டிருப்பார்கள்." என்று காரிக்கண்ணனார் விழிகளை அகலத் திறந்தவாறு புதிய துடிப்புடன் முழங்கினார்.

"எல்லாம் உங்கள் கரிகால் மன்னவரின் அரசியல் அறிவு நுட்பத்தால் விளைந்த முடிவுகள்தான்!"

—என்று புன்முறுவலோடு கூறினான் பாண்டிய மன்னன்.

"இல்லை; இல்லை! அதெல்லாம் ஒன்றுமில்லை.......ஏதோ நடக்க வேண்டுமென்றிருந்தது; நடந்து விட்டது!" என்றான் கரிகாலன்.

புலவர், பெருமிதத்தோடு பேசினார்: "ஏன் மன்னவா மறைக்க வேண்டும்? தங்களின் அரசியல் அறிவைப் பாராட்டி எழுதுதற்குச் சுவடிகள் போதாது என்பதை நாடறியும்; நானறிவேன். இன்றல்ல; இளமைப் பருவத்திலேயே தாங்கள் சாதித்த காரியங்கள், ஒப்பிடுவதற்கரிய உயரிய காரியங்கள் என்று அறிஞர் குழாம் இன்றும் சிறப்பித்துக் கூறுவதை என் செவிகள் கேட்டு சிந்தையில் குளிரேற்றுகின்றன. மதுரைக் காவலனே! எம் சோழ மன்னரின் திறமைக்கும், அரசியல் அறிவுக்கும் ஒரு சிறு உதாரணம் கூறுகிறேன்; கேளுங்கள்! சோழரது இளமைப் பருவத்தில் கொலு மண்டபத்திலே முறையிட வேண்டி இரண்டு வயதேறிய கிழவர்கள் வந்தார்கள். வந்த முதியவர்கள் அரசரது இளமைத் தோற்றங்கண்டு, இந்த இளைஞரா முறையீட்டைக் கேட்டு நீதி வழங்கக் கூடியவர் என்று திகைப்படைந்தார்கள். கரிகாலரது வயது கண்டு அந்தப் பெரியவர்கள் அவ்வளவு அலட்சியமாகக் கருதிவிட்டனர். சிறுவனிடம் நீதி கிடைக்காது என்று திரும்ப எண்ணினர். அதை எப்படியோ மன்னர் புரிந்து கொண்டார். முறையிட வந்த முதியவர்களிடம் தக்க நீதியளிக்கத் தகுதி மிக்க ஒருவரை அழைத்து வருவதாகக் கூறிப் போய் விட்டார் மன்னர். பின்னர் கொலு மண்டபம் கூடிற்று. முறையிட வந்த முதியோர் வந்தனர். தள்ளாடித் தண்டூன்றிய கிழவர் ஒருவர் அரியாசனத்தில் அமர்ந்து நீதி விசாரணையைத் துவங்கினார். வழக்கு முடிந்தது; நல்ல தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்த நேர்மையான தீர்ப்பு கண்டு முறையிட வந்தவர்கள் மனங்களித்தனர். கிழவரை வாழ்த்தினர். கிழவரின் தாடி கீழே விழுந்தது. நரைத்த தலைமுடி கழன்றது. கிழவர் வேடத்தில் வந்து நீதி வழங்கியது இளைஞர் கரிகாலன் என்ற உண்மை வெளியாயிற்று. நாடு மகிழ்ந்தது. கரிகாலனை வாழ்த்தியது. அப்படிப்பட்ட திறமை கொண்டவர் எங்கள் மன்னர்." என்று புலவர் புகழ்ந்துரைத்தார்.

கரிகாலன், புகழுரைகளைக் கேட்க மனமின்றித் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டான். பாண்டியனும் புலவரோடு சேர்ந்து கொண்டு புகழ்மாலை சூட ஆரம்பித்தான்.

"இளம் வயதில் எதிரிகளால் சூழப்பட்டு சிறையிலே சிக்கி விட்ட சிங்கமாம் கரிகாலரின் உயிரைக் குடிக்கத் திட்டமிட்ட கொடியவர்களையும் நான் அறிவேன். எதிரிகள் சிறைக் கோட்டத்திற்குத் தீ மூட்டினர். அந்த எரி நெருப்பிலேயிருந்து இவர் தப்பியிருக்காவிட்டால் தமிழகம் மகாவீரன் ஒருவரை இழந்திருக்கும். நான் போற்றுதற்கரிய ஒரு நண்பரைப் பெறாமலே போயிருப்பேன். பூம்புகாரின் பொலிவு என்றைக்கோ அழிந்து போயிருக்கும்!"

பாண்டியனும் புலவரும் மாறி மாறித் தன்னைப் பற்றிப் பேசுவது கண்ட கரிகாலன், "போதும்! தயவு செய்து நிறுத்துங்கள். ஏற்கனவே இந்த மணிமுடியால் என் தலை கனத்திருக்கிறது! மேலும் கனத்துப் போகச் செய்யாதீர்கள்!" என்றான், கனிவாக!

"கனத்துவிட்டது என்பதற்கு அடையாளமாகக் கழுத்திலே நிற்க முடியாமல் தங்கள் தலை கீழே தொங்குகிறது மன்னா! அவ்வளவு அடக்கப் பண்பு தங்கள் தலையிலே நிரம்பிக் கொண்டேயிருக்கிறது!'" என்று புலவர் கூறினார்.

"தமிழ் மணம் பரப்பும் மலர்க் கொடி நீங்கள்! எங்கணும் மணம் பரவச் செய்து கொடிகளுக்கு வேலி அமைத்துப் பாதுகாக்கும் பைந்தமிழ்க் காவலர் பாண்டியர்! நீங்கள் இருவருமே என்னைப் புகழ்ந்து கூறிவிட்டீர்கள் என்கிறபோது தமிழன்னையே என்னைத் தழுவி முத்தமிட்டு வாழ்த்தியதுபோல் ஆகிவிட்டது. இனி என்ன குறை எனக்கு?" எனச் சொல்லிக் கரிகாலன் உள்ளத்து உணர்ச்சிகளை வெளிக் கொட்டினான்.

தமிழ்க் காவலரும் பாவலரும் மனம் திறந்து மடைதிறந்த தமிழாற்றில் நீந்திக் கொண்டிருக்கும்போது அரண்மனை உட்கோயிலில் காவல் புரியும் கிரேக்க நாட்டுக் காவலன் ஒருவன்

2. அடியார் கூட்டம்

கரிகால் மன்னன் எதிரே வந்து நின்று வணங்கி நிமிர்ந்தான்.

"என்ன?" — கரிகாலன் வினவினான்.

"மன்னர்கள் பவனி முடிந்ததும் முடியாததுமாக ஒரு சம்பவம் நடந்துவிட்டது. யாரோ இரு பாண்டிய நாட்டு வீரர்கள் ஒருவருக்கொருவர் போரிட்டுக் கொண்டனர். ஒருவன் மடிந்தான். மற்றவன் போன இடம் தெரியவில்லை. இருவரில் ஒருவன் பெயர் செழியன் என்கிறார்கள்!"

காவலன் இதைச் சொல்லி முடிப்பதற்குள் பெருவழுதிப் பாண்டியன் துடித்துவிட்டான்.

"ஆ! செழியனா? மடிந்தவன் பெயர் செழியனா? காவலனே! சரியாகச் சொல்! மடிந்தவன் செழியனா?" — பெருவழுதி, ஆவலோடு கேட்டான்.

"இருவரில் யார் செழியன் என்று எனக்குத் தெரியாது. ஆனால் போராட்டம் நடந்தது புலவர் வீட்டுக்கு எதிரில்தானாம்! இறந்தவன் பிணம் அரண்மனைக்குப் பின்புறமுள்ள பாழ் மண்டபத்தில் கிடத்தப்பட்டிருக்கிறது. மன்னர் விரும்பினால் பார்வையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன." என்று காவலன் பதில் சொன்னான்.

புலவருக்கு ஒரே திகைப்பு! நடந்தவைகளைச் சொல்லிவிடலாமா என்று இரண்டு மூன்று தடவை நாவை அசைத்தார். ஆனால் வார்த்தைகள் வெளிப்படவில்லை. செழியன் அவரிடம் கேட்டுக்கொண்டிருக்கிறான்; யாரிடமும் அந்தச் செய்தியைச் சொல்லக்கூடாதென்று! மௌனமே சிறந்தது எனக் கண்டார்.

கரிகால மன்னன் புலவரிடம், "உங்கள் வீட்டுக்கெதிரில் தானே நடந்ததாம்; உங்களுக்கு ஏதாவது விபரம் தெரியுமா?" என்று திடீரென்று கேட்டுவிட்டான்.

"நான்தான் இங்கு வந்து விட்டேனே !" என்றார் புலவர்.

"அய்யோ—செழியன் செத்திருக்கக்கூடாது! செத்திருக்கக் கூடாது! சோழ மன்னரே! நான் உடனே போய் அந்த வீரனின் சடலத்தைக் காண வேண்டும். இறந்தது யார் என்பதை அறிய வேண்டும் !" என்று பரபரப்போடு கேட்டுக்கொண்டான் பெருவழுதி.

"இதோ, ஆவன செய்கிறேன். நானும் வருகிறேன்!" என்று விடை பகர்ந்து கரிகாலன் காவலனிடம் ஏற்பாடுகளைச் செய்யக் கட்டளை பிறப்பித்தான்.

புலவர், கரங் கூப்பி விடை பெற்றுக் கொண்டார். அவருக்குத் தெரியும்; பாண்டியனின் அன்புக்குப் பாத்திரமான செழியன் சாகவில்லையென்று! அதனால் அவரது முகத்தில் எந்த மாறுதலும் ஏற்படவில்லை. கரிகாலன், புலவருடன் ஏழடி தூரம் நடந்து சென்று வழியனுப்பி விட்டுப் பாண்டியனை அழைத்துக் கொண்டு அரண்மனைக்குப் பின்புறமுள்ள பாழ் மண்டபம் நோக்கி விரைந்தான். பெருவழுதிப் பாண்டியனின் உள்ளம் அவனையும் முந்திக்கொண்டு பாழ் மண்டபத்துக்கு ஓட முயன்றது. அரண்மனையின் அழகு குலுங்கும் பல பகுதிகளைக் கடந்து இருமன்னர்களும் குறிப்பிட்ட மண்டபம் நோக்கி நடந்தனர்.

செல்லும்போதே அருகிருந்த வீரர்களிடம் கரிகாலன் கேட்

டான்: "மண்டபத்தைச் சுற்றிக் காவல் போடப்பட்டிருக்கிறதா?" என்று!

வீரர் தலைவன் சொன்னான்; "பிணம்தானே! ஓடியா போய் விடும்; எதற்கும் இருக்கட்டும் என்று நான்கைந்து வீரர்கள் காவல் இருக்கிறார்கள் அரசே!" என்று!

மன்னர்கள் மண்டபத்தருகே வந்தனர். வந்தவர்கள் திடுக்கிட்டனர். மண்டபத்தைக் காவல் புரிந்த வீரர்கள் ஐவர் படுகாய முற்றுச் சாய்ந்து கிடந்தனர், சவமாக!

அந்தக் கொடுமையான காட்சியைக் கண்டான் கரிகாலன். "நாம் காண வந்தது ஓரே ஒரு சவத்தைத்தானே?" என்று பதைபதைப்புடன் கேட்டான். ஆத்திரம் தாங்க மாட்டாதவனாய் மண்டபத்துக் குள்ளே வெகு வேகமாக நுழைந்தான்.

உள்ளே பிணம் மூடப்பட்டுக் கிடந்தது. பாண்டிய நாட்டு உடைதான் போர்த்தப்பட்டிருந்தது. "பாண்டிய மன்னரே! நீங்கள் குறிப்பிடும் செழியனா என்று பாருங்கள்!" எனக் கூறியவாறு பிணத்தின்மீது மூடப்பட்டிருந்த துணியை விலக்கினான் கரிகாலன்.

துணி மறைவில் பிணம் கிடந்தது உண்மைதான்! ஆனால் அது மனிதனின் உயிரற்ற உடல் அல்ல! ஒரு கோவேறு கழுதையின் அழுகிப்போன சடலம்!

திடுக்கிட்டனர் இரு வேந்தர்களும். ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். கரிகாலனுக்கு யாரை என்ன சொல்வதென்றே புரியவில்லை.

"இந்த அவமானம் எப்படி நடந்தது? இதை அனுமதித்தவர்கள் யார்? யார்?" என்று கர்ச்சித்தான்.

எல்லா வீரர்களும் நடுங்கியவாறு நின்றனர். கிரேக்கக் காவலனை அருகே அழைத்தான் சோழ மன்னன்.

"நீ, அந்த வீரனின் பிணத்தைப் பார்த்தாயல்லவா?"

"பார்த்தேன், அரசே!"

"இந்தப் பாழ்மண்டபத்தில் அந்த சவத்தைப் பாதுகாப்பாக வைத்ததும் நீ தானே?"

"நானும் மற்ற வீரர்களும்தான் அரசே!"

"பிறகு எப்படி போர் வீரனுக்குப் பதிலாகக் கோவேறு கழுதை வந்தது?"

"அதுதான் மன்னா மர்மமாக இருக்கிறது!"

"கோழைகள்! குருடர்கள்! நம் கோட்டைக்குள்ளேயே எதிரி விளையாடியிருக்கிறான் — அதை அனுமதித்து ஏமாந்திருக்கிறீர்கள்; ஏமாளிகள்!"

கரிகாலனின் கோபம் எல்லை மீறியது. பாண்டியனைப் பார்த்து "நண்பரே! என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்!" என்று மெல்லிய தொனியில் கேட்டுக் கொண்டான். அப்போது அவன் கண்களில் கனல் பறந்து கொண்டிருந்தது

"இறந்தவன் செழியன் அல்ல என்ற இன்பச் செய்தி எனக்குக் கிடைத்தால் போதும்!" என்று கண்கலங்கியவாறு கூறினான் பெருவழுதிப் பாண்டியன்.

"யார் அந்தச் செழியன்? அவனுக்காக மிகவும் கவலைப்படுகிறீர்களே!" என்று விசாரித்தான் சோழன்.

பெருவழுதியின் கண்களில் தனி ஒளி கிளம்பிற்று. இதழ்கள் துடித்தன. மிகவும் கம்பீரமான சொற்கள் புறப்பட்டன.

"செழியன் — அவன் பெயர் எனக்குச் செந்தேன்! செழுந்தமிழன்! செருமுனைக் காளை! சிந்தனையாளன்! சித்திரக் கவிதைகள் பாடும் இளம்புலவன்! அவனின்றி நான் வாழ முடியாது — அவன் என் உயிர்!"

செழியனைப்பற்றிப் பாண்டியன் தீட்டிய ஓவியம் கண்டு சோழன் வியப்பிலாழ்ந்தான். "அவனுக்கும் தங்களுக்கும் என்ன உறவு?" என்று கேட்டவாறு கரிகாலன் மண்டபத்தை விட்டு வெளியேறத் தொடங்கினான்.

"அவனைப்பற்றிய முழுவிபரம் பெரிய கதை! அதைப் பிறிதொரு சமயம் கூறுகிறேன். இப்போது எனக்கு வேண்டியதெல்லாம் அவனைப்பற்றிய தகவல்தான்!" என்றான் பாண்டியன்.

உடனே கரிகாலன், தன் வீரர்களை அழைத்து செழியனைப்பற்றிய சிறு செய்தி கிடைத்தாலும் உடனே கொண்டு வருமாறு ஆணையிட்டான். அந்தப் பொறுப்பு முழுவதையும் தான் ஏற்றுக் கொள்வதாக கரிகாலன், பாண்டியனிடம் வாக்களித்தான்.

"விழா நிகழ்ச்சிகளில் ஏற்பட்ட களைப்பும் அதனைத் தொடர்ந்து வந்த கவலையும் தங்கள் உள்ளத்தில் அமைதியின்மையை உண்டாக்கியிருக்கக்கூடும். அதனால் தங்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாளிகையில் ஓய்வு பெறுங்கள்!" என்று கரிகாலன் கேட்டுக் கொண்டான். பாண்டியனும் சம்மதித்துக் கரிகாலனை விட்டுப் பிரிந்து தனி மாளிகை நோக்கிப் புறப்பட்டான்.

* * *

பெருவழுதியின் உள்ளத்தைப் புயலாக்கிவிட்டு, செழியன் நிம்மதியாகப் புலவர் காரிக் கண்ணனார் வீட்டில் சாய்ந்திருந்தான். முத்துநகையின் அன்பு உபசாரங்கள் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தன. அவள் தயாரித்துக் கொடுத்த மிளகு நீர் மிகவும் உற்சாகத்தை அளித்ததாகப் பெருமை பாராட்டிப் பேசினான். அவளுடைய குடும்ப வரலாறுகளைப் பற்றியெல்லாம் தெரிந்து கொள்ள செழியனுக்குப் பேராவல் எழுந்தது.

"உன் தாயார் பெயர் என்ன?" என்று கேட்டான்.

"தாமரைக் கண்ணியார்! ஆனால் என் தாயின் முகத்தை நான் பார்த்ததே இல்லை. தாயைக் கொன்றுவிட்டுப் பிறந்த சேய் நான்!" என அழுது கொண்டே பதிலிறுத்தாள் முத்துநகை.

"உங்கள் பெற்றோர்கள் இருக்கிறார்களா?"—முத்துநகை, செழியனிடம் இதைக் கேட்கத் தவறவில்லை.

"இருக்கிறார்கள்!"

"எங்கேயிருக்கிறார்கள்?"

"என் இருதயத்தில்!"

"தாயின் பெயர்?"

"தமிழ்!"

"தந்தை?"

"பாண்டிய நாடு!"

"என்ன சொல்கிறீர்கள்?"

"ஆமாம் முத்துநகை! பாண்டிய நாட்டுத் தந்தையும் தமிழ்த் தாயும் பெற்றெடுத்த மகன்தான் நான்!"

...பிணத்தைக் காணாது தவித்தான், பெருவழுதிப் பாண்டியன்...

"நான் சொன்னது போலச் சரியாகச் சொல்லுங்கள்!"

"சரியாகச் சொல்ல என்னால் இயலாது! எப்படியோ எனக்கு ஒரு தாயும் தந்தையும் இருந்திருக்க வேண்டும்; அது நிச்சயம்!"

"அவர்கள் யார்? அவர்கள் பெயர்?"

"தயவு செய்து கேட்காதே— என்னால் சொல்ல இயலாது! அதனால் எனக்குத் தாய் தந்தையே கிடையாது என்று கருதி விடாதே! தாமரையிலும், அல்லியிலும், திடீரெனக் குழந்தைகள் தோன்றுவதாகக் கதை கட்டுகிறார்களே; அப்படிப்பட்ட தெய்வப் பிறவியல்ல நான்! தாய் வயிற்றில் உதித்த மனிதப் பிறவிதான்!"

அவனுடைய பேச்சு நயங் கண்டு முத்துநகை மகிழ்ச்சி கொண்டாள். தாயைப்பற்றிய நினைவு அவளுக்கு சோகத்தை உண்டுபண்ணியிருந்தபோதிலும் அவனது பதில்களில்உள்ள சுவை கண்டு சோகத்தையும் ஒருவாறு மறந்தாள்.

இருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது தெருப் புறத்திலேயிருந்து "அன்பே சிவம்! அன்பே சிவம்! பண்பே சைவம்!" என்ற முழக்கம் கேட்டது.

சிவனடியார்கள் வந்திருப்பதாகச் செழியனிடம் தெரிவித்து விட்டு முத்துநகை தெருப்பக்கத்துக் கதவைத் திறந்தாள். பதினைந்துக்கு மேற்பட்ட அடியார் கூட்டத்தினர் அவள் கதவைத் திறப்பதற்குள் மளமளவென்று உள்ளே நுழைந்தனர். முத்துநகைக்கு ஒரே புதுமையாக இருந்தது. தெருவழியே செல்லும் அடியார் கூட்டம் திடீரென வீட்டுக்குள் நுழைந்தது கண்டு திடுக்கிட்டுக் கலங்கினாள்.

அவர்கள் அவளைப் பொருட்படுத்தவில்லை. "அன்பே சிவம்! பண்பே சைவம்!!" என்று கூறியவாறு அவர்கள் செழியனின் படுக்கைப் பக்கம் பாய்ந்தனர். பருந்து உணவைப் பற்றுவதுபோல் அவனைப்பற்றிக் கொண்டனர்.

செழியன், திமிறிப் பார்த்தான். அன்பே சிவமென உச்சரித்த அடியார்கள் கைகளில் வாட்கள் மின்னிக் கிளம்பின. முத்துநகை அது கண்டு அலறினாள்! அவளை ஒரு சிவனடியார் பிடித்துக் கொண்டார். இன்னொரு அடியார், ஒரு மூலிகையை அவள் முகத்தருகே நீட்டினார். அவள் மயங்கிக் கீழே விழுந்தாள்! பிறகு அவளை யாரும் திரும்பிப்பார்க்கவில்லை. செழியனைத் தூக்கிக் கொண்டு அடியார் கூட்டம் வெளியேறியது. முத்துநகை ஆடாமல் அசையாமல் படுக்க வைத்த சிலைபோல மயங்கிக் கிடந்தாள்.

தெருவிலே "அன்பே சிவம்" என முழங்கிச் செல்லும் அடியார்களின் கூட்டத்தைப் பார்த்தவாறு அவர்களுக்கு வணக்கம் தெரிவித்து விட்டுத் தன் வீடு நோக்கி வந்துகொண்டிருந்தார் காரிக்கண்ணனார். அடியார்களின் அன்னக் காவடிக்குள்ளே மயக்க மூட்டப்பட்ட செழியன் மறைத்து வைக்கப்பட்டிருப்பதை அவர் எப்படிக் கண்டு பிடிக்க முடியும்? அவர், செழியனிடமும் முத்துநகையிடமும் அரண்மனையில் நடந்தவைகளைக் கூற வேகமாக வந்துகொண்டிருந்தார்.

[தொடரும்]

பெண்சிங்கம்

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

நலனைக்கூட குழி தோண்டிப் புதைத்து விட்டது!

அம்மையார் போராடும் வலுவுள்ள இருதயம் பெற்றவர்கள் என்று சொன்னேன். ஆமாம்; ஒரே ஒரு 'பொட்டுக் கட்டும் வழக்க எதிர்ப்பு'க்காக மட்டுமல்ல; காலமெல்லாம் சமூகப்பணிகளுக்கென்றே உழைத்த அவர்கள் தனிப்பட்ட மனிதர்களின் நலனிலும் எல்லையற்ற அக்கரை காட்டி வந்திருக்கிறார்கள்.

* *

● ஆதரவென்று தேடிவந்தவர்களை வெறுங் கையுடன் அனுப்பி வைப்பவரல்ல அவர்; உதவி யென்று வந்தவர்களுக்கு, உதவி மட்டுமல்ல; உறுதியும் நல்ல உற்சாகத்தையும் தந்திடும் தனியாற்றல் பெற்றவர்கள்!

அவர்கள் வாழ்ந்ததென்னவோ எளிய வாழ்க்கைதான. முப்பதாண்டு காலமாக தங்கசாலையில் அந்தத் தங்க நிகர் நெஞ்சம் கொண்ட தாயின் இல்லத்திற்கு தினம் தினம் நூற்றுக் கணக்கானவர் வருவார்கள்; போவார்கள்!

அவர்களில் இலவச மருத்துவம் பெற வருகிறவர்கள் இருப்பார்கள்; கல்லூரியில் இடம்பெற வருகிறவர்கள் சிலர் இருப்பார்கள்: வேலை தேடிவருகிறவர்கள் அநேகர் இருப்பார்கள்!

அத்தனை பேருக்கும் தன் சக்திக்கு மீறிய அளவு உதவியிருக்கிறார்கள், அம்மையார்.

கல்லூரித் தலைவர்களுக்குச் சிபார்சுக் கடிதங்கள் தருவார்கள்; கலையுலகக் காவலர்களுக்கு ஆதரவு தரும்படிக் கடிதம் எழுதுவார்கள்! இப்படி இருந்த இடத்திலிருந்தே அவர் ஆற்றியபணிக்கு சமுதாயம் சிரம் தாழ்த்துகிறது!

ஆமாம்; அம்மையாரின் சவ அடக்க தினத்தன்று அந்தக்கண் கொள்ளாக் காட்சியைத்தான் நான் கண்டேன். தாயைப் பிரிந்த கன்றுகள்போல் தடுமாறும் உள்ளத்தோடு தளர் நடை போட்டு வந்த ஆயிரக் கணக்கானவர்களில் அம்மையாரால் ஆதரிக்கப்பட்டோர் பலர்! அழுதழுது அவர்கள் சிந்திய கண்ணீருக்கு மட்டும் பேசச் சக்தியிருந்தால், அந்தக் கண்ணீரைத் துடைத்த கடமைவாதிக்கு வாழ்த்துக்கள் கோடி கோடியாய் குவித்திருக்கும்.

ஏழ்மைக்கும் வாழ்வுக்கும் இப்படி வலுவானதொரு பாலத்தை அமைத்தார்கள், அம்மையார்!

அதுபோல் அரசியல் துறையில், நீதிக் கட்சிக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் நல்லதொரு பாலமாக அவர்களே விளங்கினார்கள்!

* * *

● அரசியல் ஈடுபாடுடையவர்களுக்கு ஆர்வம் மட்டும் போதாது; நேரத்திற் கேற்ப ஆலோசிக்கும் திறனும் வேண்டும்—இந்த அரசியல் தத்துவம் அம்மையாரின் வாழ் நாளில் பல இடங்களில் பளிச்சிடுகின்றது.

பெரியார் ராமசாமி ஐரோப்பா சென்றிருந்த காலம் அது. அப்போது நீதிக் கட்சி சென்னையில் நல்ல நிலையில் வளர்ந்திருந்தது!

ஆனால், அப்போதுதான் கட்சிக்குள்ளே சிறு குழப்பம் நேர்ந்தது—எப்படி சமாளிக்கப் போகிறோமோ என்ற பீதியையும் ஏற்படுத்திவிட்டது.

நீதிக் கட்சியின் தலைவர் யார்?

அதைத் தேர்ந்தெடுக்க வேண்டிய பெரும் பொறுப்பு கட்சிக்கு ஏற்பட்டது; ஆனால் அதில்தான் போராட்டமொன்றும் குறுக்கிட்டு விட்டது!

தஞ்சையிலே நீதிக் கட்சியின் மாநாடு கூடியது. தலைமைப் பதவிக்குப் போட்டியிட தெலுங்கு நாட்டிலிருந்து முனுசாமி நாயுடு என்பவர் வந்தார், ஏராளமான பிரதிநிதிகளுடன். அவரோடு போட்டியிடத் துணிந்த பொப்பிலி அரசருக்கோ செல்வாக்குக் குறைந்திருந்த நேரம் அது!

முதல் நாள் மாநாடு பெரும் குழப்பத்தில் முடிந்தது; அடிதடிச் சண்டை ஏற்படாதிருந்ததே மிகவும் ஆச்சரியம்!

தெலுங்கர்கள் மிகவும் கோபமடைந்திருந்தார்கள். தலைவர் தேர்தல் கட்சிக்குள்ளே பெரும் பிளவையே ஏற்படுத்தி மாற்றாரின்கேலிக்கும் கிண்டலுக்கும்வழியமைத்துக் கொடுத்து விடுமோ என்று நல்ல மனம் படைத்தவர்கள் ஆயாசப்பட்டார்கள்! எத்தகைய சமாதானம் சொல்லியும் தெலுங்கர்கள் கேட்கவில்லை. இந்த இக்கட்டான நிலையில் டாக்டர் தருமாம்பாள் அம்மையார்தான் நல்ல யோசனை ஒன்றை வெளியிட்டார்கள்.

"நமது கருத்தைத் தெலுங்கர்களுக்குப் புரியாத தமிழிலேயே எடுத்துச் சொல்லி என்னபயன்? அவர்கள் கொண்டிருக்கிற ஆத்திரத்தை நாம் தணிக்கும்போது அதை அவர்கள் புரிந்து கொள்கிறார்களா என்று சுவனிக்க வேண்டாமா? ஆகவே நம்மில் தெலுங்கு நன்றாகப் பேசத் தெரிந்த ஒருவரை அழைப்போம். ஆத்திரக்காரர்கள் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டுமானால், பெண்மணியாக இருந்தால் நல்லது! அந்தப்பெண்ணை விட்டு தெலுங்கில் சமாதானம் சொல்லச் செய்வோம்!" என்றார்கள் டாக்டரம்மையார்.

இந்த நல்ல யோசனையை ஏற்றுக் கொண்ட அஞ்சா நெஞ்சர் அழகிரிசாமி திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியத்தை அக்கூட்டத்திற்குத் தலைவராக ஆக்கினார். இந்திராணி அம்மையார், டாக்டரம்மாளின் ஆலோசனையின்படி தெலுங்கரிடையே சமாதானம் சொல்லப் புகுந்தார், தெலுங்கு மொழியில்!

"தமிழர்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து முனுசாமி நாயுடுக்கு எதிராக இருப்பதாகக் கருதக்கூடாது; பொப்பிலி அரசரைத் தலைவராக்க வேண்டுமென்பதற்கு வேறு ஏதும் தவறான காரணம் கிடையாது; அவரது உழைப்புக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும் என்கிற ஒரே காரணம்தான்!" என்றெல்லாம் நீண்ட நேரம் உரை நிகழ்த்தினார்கள்!

அன்று நீதிக்கட்சியில் ஏற்பட இருந்த பெரும் பிளவு தவிர்க்கப்பட்டது, எல்லோரும் ஏது செய்வது என்று தவித்துக் கொண்டிருந்த நேரத்தில் தருமாம்பாள் அம்மையார் தந்த தங்கமான யோசனையால்!

* * *

இதுபோல் பலமுறை நீதிக்கட்சியின் வளர்ச்சிக்கு அம்மையார் பாடுபட்டிருக்கிறார்கள். அந்தக் காலத்தில் எல்லாம் அரசியலில் பெண்கள் ஈடுபாடு கொள்வது என்பதே மிகமிக ஆச்சரியம்! நீதிக்கட்சி மாநாடு என்றாலே மொத்தமாக பத்துப் பெண்கள் வருவது அபூர்வம். அவர்களுக்கெல்லாம் தலைவியாக நமது தருமாம்பாள் அம்மையாரே விளங்கினார்கள்.

இருபது ஆண்டுகளுக்கு முன் சென்னை நகரசபையில் ஒரு இக்கட்டான நிலைமை ஏற்பட்டது. அப்போது நடந்த தேர்தலில் நீதிக் கட்சி மூன்றில் ஒரு பகுதி இடத்தைத்தான் கைப்பற்றி இருந்தது; புதிதாக முளைத்திருந்த சுயராஜ்யக் கட்சியோ பெரும் பான்மையான இடத்தைக் கைப்பற்றி இருந்தது.

சென்னையில் மிகப் பெரிய செல்வவானும் — காங்கிரஸ் தலைவருமாகிய எஸ். சீனுவாச ஐயங்கார் சுயராஜ்யக் கட்சியின் தலைவர்!

பனகல் அரசர், நீதிக் கட்சியின் தலைவர்!

இந்த நிலையில் 'மேயர்' தேர்தல் வந்தது! சுயராஜ்யக் கட்சியினர்தான் நகரசபைத் தலைவர் பீடத்தில் அமர்வார்கள் என்று நம்பியவர்கள் ஏமாந்து போனார்கள். பனகல் அரசரின் ராஜ தந்திரத்தால் சுயராஜ்யக் கட்சி பிளவு பட்டுப் போயிற்று! நீதிக் கட்சியின் சார்பில் டாக்டர் ஏ. ராமசாமி (முதலியார்) சென்னையின் நகரத் தந்தையானார்!

இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் உடனிருந்து பெருந்தொண்டுகள் புரிந்தவர், நமது டாக்டரம்மையார் அவர்கள்!

* * *

● பொதுத் தொண்டுப் பிரவேசத்தால் சந்தித்துத் தீர வேண்டிய எந்த விளைவுகளுக்கும் அம்மையாரின் இதயம் பின் வாங்கியது கிடையாது!

இந்தி எதிர்ப்பு இயக்க நேரத்தில் இந்த நாட்டில் பெண்களும் மொழிகாக்கத் துணிவார்கள்; அதிலே உயிர் போயினும் அஞ்சார்கள்—என்பதை செயலின் மூலம் எடுத்துக் காட்டியவர், நமது அம்மையார்தான்!

ஆளும் கட்சியிலே இருந்தவர்கள் அஞ்சி நடுங்கிய அளவுக்கு தாய்க் குலத்தின் பெரும் படையைத் தயாரித்தவரும் அம்மையார்தான்!

பெண்கள் சிறைக்குச் செல்வது என்பதே பயங்கரமாகக் கருதப்பட்ட காலத்தில், சிறைக்கும் அஞ்சாத தியாக உள்ளத்தைப் பெற நூற்றுக் கணக்கான பெண்மணிகளைத் தூண்டியவரும் அம்மையார்தான்!

ஆமாம்; அந்தத் தூண்டா மணிவிளக்கு இன்று அணைந்து விட்டது!

ஆனால் துவண்டு மூடுகின்ற நமது கண்களுக்கு முன்னே அந்த விளக்கிலிருந்து வீசிய ஒளி மட்டும் மங்காது—மறையாது தெரிகிறது!

அதன்வழி நடப்போம்! விடுதலைச் சேனையிலே ஆயிரமாயிரம் சகோதரிகளைச் சேர்ப்போம்! நமது இலட்சிய முகடு அதிக தூரத்தில் இல்லை என்பதை ஆட்சியினருக்கு உணர்த்துவோம்!

அந்தப் பெண் சிங்கத்தின் திருப்பெயர் வாழ்க! வாழ்க!

★

தடுப்பாரில்லை; இடிப்பாரில்லை!

ஏன்

★

"திபேத்திலிருந்து வருகின்ற அகதிகளின் உடமைகளை யாரும் விலைக்கு வாங்கக் கூடாது! அவர்கள் வறுமைக்குப் பலியானார்கள் என்ற கெட்ட பெயர் ஏற்படக் கூடாது!"

—என்கிறார் சமாதானத் தூதுவர் பண்டித நேரு!

"திபேத்திய அகதிகளை கவனிக்க வேண்டியது அரசாங்கத்தின் கவலை! அவர்களுக்கான உதவிக் கழகம் ஒன்றை சென்னை, கல்கத்தா, பம்பாய் ஆகிய இடங்களில் ஏற்படுத்துகிறோம்!"

—என்கிறார், திபேத்திய அகதிகளின் மத்திய உதவிக் குழுத் தலைவர் ஆச்சார்ய கிருபளானி!

"15,000 அகதிகளுக்குமேல் வந்து குவிந்து விட்டார்கள், பாரதமாதாவின் பாதத்தடியில்!"

"அவர்களின் உதவிக்கு உதவப்படும் பொருட்களுக்கு ரயில் கட்டணம் கிடையாது!"

"வழங்கப்படும் நிதிக்கு வருமான வரியிலிருந்து விலக்கும் தரப்படும்!"

—சர்க்கார் இப்படி எல்லாம் 'திடீர் திடீ'ரென்று உத்தரவுகளைப் பிறப்பிக்கின்றார்கள்!

அன்று பாகிஸ்தானிலிருந்து பாரதத்துக்கு ஓடி வந்தனர்; 300 கோடி ரூபாயை வாரி இறைத்து வள்ளல் தன்மையைக் காட்டிக்கொண்டது அரசு! இன்று திபேத்தியர் அரசினரின்—அவர்களின் தயாள குணத்திலே சுக வாழ்வு பெறுகிறார்கள்!

ஆனால்....பக்கத்திலிருக்கும் பர்மாவிலிருந்து—மலேயாவிலிருந்து—இலங்கையிலிருந்து—துரத்தப்படுகிறார்களே; தமிழர்கள்—அவர்கள் சிந்துகின்ற கண்ணீர் இந்த நாட்டு அரசினரின் கண்களில் தென்பட வில்லையே; ஏன்?

—இதோ பாருங்கள்; இந்த இடர் துடையுங்கள் என்று இங்கிருப்போர் எடுத்துரைக்க வில்லையே; ஏன்?

ஏன்?...ஏன்?...

கலப்படம்

மலைகளுக்கும் மருத்துவமாம்—‘மாமேதை’களின் ஆட்சியில்!

“அரசே! அழகான குதிரையொன்று கொண்டு வந்திருக்கிறேன்; அரபி நாட்டைச்சேர்ந்த குதிரை; காற்றோ புயலோ எனப் பறந்திடும்; கம்பீரச் சவாரிக்கும் உகந்தது; ஏற்றுக் கொள்ளும்; விலை ஆயிரம் தங்க நாணயங்கள் தான்!”...என்று அவன் தெண்டனிட்டு வேண்டிக் கொண்டான், டில்லிப் பாதுஷா அக்பரிடம்!

அக்பர் குதிரையைப் பார்வையிட்டார்; அவன் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மையென உணர்ந்தார். உடனே அவரது ‘மூளை’ வேறு திசையில் செல்ல ஆரம்பித்தது.

இந்தக் குதிரையுடன் இதே சாதிப் பெண் குதிரையொன்றையும் வாங்கி வளர்த்தால்...இங்கேயே நல்ல குதிரைப் பரம்பரையை உண்டாக்கலாம்—என நினைத்தார் பாதுஷா. உடனே அந்தக் குதிரைக்குண்டான விலையைத் தரச்சொன்னார், அமைச்சன் பீர்பாலிடம்! குதிரை விலைக்கு வாங்கப்பட்டது.

“ஏ, வியாபாரி! இந்தக் குதிரையைப்போல் பெண் குதிரையொன்று கிடைக்குமா?”—என்று கம்பீரமான குரலில் கேட்டார் பாதுஷா!

“கிடைக்காமலென்ன அரசே! நிறையக் கிடைக்கும். ஆனால்...?”

“என்ன ஆனால்....? ஏன் தயக்கம்?”

“ஒன்றுமில்லை அரசே! பெண் குதிரைகளுக்கு முன்பணம் வாங்குவது வழக்கம்!”

“ஓகோ...ஏன் இதற்கும் முன்பணம் வாங்கிக் கொள்ளேன்.” என்றார், பாதுஷா. தலையசைத்தான் வியாபாரி. தங்க நாணயங்களுடன் ஊர்போய்ச் சேர்ந்தான் அவன்!

கொஞ்ச நாள் கழித்து அமைச்சர் பீர்பாலை அழைத்து, “நம் அரசாங்கத்திலுள்ள முட்டாள்களின் பேரேடு ஒன்றைத் தயாரித்து வா!” எனக் கூறினார் அக்பர்.

சில நாட்கள் கழித்து நீண்டதொரு முட்டாள்களின் பேரேடு ஒன்றைத் தயாரித்து வந்தான் அமைச்சன் பீர்பால்; அதை மகிழ்வுடன் ஏற்றுப் பிரித்துப் படித்தார் அக்பர்.

உடனே அக்பரின் கண்கள் கோவைப் பழமெனச் சிவந்தன; மீசை துடித்தது; பற்களை ‘நெற நெற’வெனக் கடித்தார். எதிரிலே நிற்பவன் அறிஞன் பீர்பால் எனத் தெரிந்து, கோபத்தை ஆற்றிக் கொண்டார். ஏன் அக்பர் பாதுஷாவிற்கு இத்தகைய கோபம் வந்தது? ஆம்; அந்த முட்டாள்களின் பேரேட்டில் முதலிலிருந்த பெயர், மொகலாய சாம்ராஜ்யத்தின் ஏகச் சக்ராதிபதி டில்லி பாதுஷா அக்பருடையதுதான்!

கோபம் சொற்களில் தெறிக்க, “பீர்பால்! ஏன் இவ்விதம் என் பெயரை இப் பேரேட்டில் எழுதினாய்?” எனக் கேட்டார் அக்பர்.

“மன்னிக்க வேண்டும் அரசே! அரபி நாட்டுக்குதிரை யொன்றை விலைக்கு வாங்கியது நினைவிருக்கிறதா, தங்களுக்கு?”—என்று பணிவோடு கேட்டான் பீர்பால்!

“இருக்கிறது”—அக்பருடைய கோபம் நிறைந்த இந்தப் பதிலில் கம்பீரமும் இருந்தது.

“அந்த அரபிக் குதிரையை விற்ற வியாபாரியிடம், அந்தக் குதிரையின் சாதியைச் சார்ந்த பெண் குதிரை ஒன்றை வாங்குவதற்காக முன்பணம் தந்தீர்களே; அந்த வியாபாரி யார்? எந்த ஊர்? அவன் பெயர் என்ன? என்றுகூட தாங்கள் கேட்டு அறிந்து கொள்ளவில்லையே! முன்பின் தெரியாதவனுக்கு முன்பணம் தந்தீர்களே; அதனால் தான் நான் உங்கள் பெயரை அந்தப் பட்டியலில் இட்டேன்!” என்றான் பீர்பால்!

பீர்பாலிடம் அக்பருக்கு நிறைய மதிப்பு உண்டு. தன்செயல் முட்டாள்தனமான செயல் என்றே உணர்ந்து கொண்டார், அக்பர். “சரி, நான்செய்த செயல் முட்டாள்தனமாகவே இருக்கலாம். ஆனால் அந்த வியாபாரி குதிரையைக் கொண்டு வந்து விட்டால்...?”—என்ற ஒரு கேள்வியைப் போட்டார் அக்பர்.

உடனே பீர்பால், “உங்கள் பெயரை அடித்து விட்டு அந்த இடத்தில் அவன் பெயரை எழுதுவேன்!” என்றான்.

ஊர் பேர் கேட்காமல் முன்பணம் தரப்படுவது முட்டாள்தனம்; அப்படித் தரப்பட்டால் ஓடிவிடுவதுதான் புத்திமானுக்கு அடையாளம். திருப்பிக்கொண்டு பணத்திற்குரிய பொருளைத் தருவது முட்டாள்தனம் என்ற பொருளில் கூறினார் பீர்பால்!

—இது நடந்தது டில்லியில்; அங்கு மொகலாய சாம்ராஜ்யம் கோலோச்சிக் கொண்டிருந்த போது நடந்தது!

சாம்ராஜ்யங்களின் சவக்காடான டில்லியில் இத்தகைய ‘மதிவாணர்களின் ஆட்சி’ அக்பரோடு நின்றுவிடவில்லை; ‘வந்தே மாதர’த்துடன். ‘அல்லாஹு அக்பர்’ என்ற சப்தத்தைக் கிளப்பி ஆட்சிபீடத்தைப பிடித்துவிட்ட காந்தியவாதிகளின் ஆட்சிவரையிலும் நீடித்திருக்கிறது.

நாள் தவறினாலும் பொழுது தவறினாலும் இந்தப் புதுடில்லிப் பெரியவர்களின் — அவர்களது எடுபிடிகளாய் விளங்கும் மாநில அரசுகளின் விசித்திரச் செயல்கள்—மேதாவிலாசச் செயல்கள் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன; நாடும் வேதனையோடு சிரித்துக் கொண்டே இருக்கிறது.

பதவி நாற்காலியில் அமர்ந்த நேரத்திலிருந்து ஏதாவதொரு பரிகசிக்கத்தகும் வேலையைச் செய்யாவிட்டால் இவர்களுக்கு சாப்பாடு உள்ளே செல்லாது; சரியான தூக்கம் வராது!

சிந்திரி உர பேர ஊழல், முந்தரா ஊழல், ஜீப்கார் ஊழல்—இப்படி எண்ணற்ற கண்மூடிச் செயல்கள் அவர்களின் அவமானச் சின்னங்களாய் நெஞ்சிலே பதிக்கப் பெற்றிருக்கின்றன.

“காடு வளர்ப்போம் வாரீர்! அந்தக் காட்டால் நாட்டுக்கு நன்மையுண்டு; நாட்டில் மழை மாரியை அது உண்டாக்கும்; இயற்கைப் பொருட்களைத் தரும்; இன்பத் தென்றலைப் பெற்றுத் தரும்; ஆகவே, காடு வளர்ந்திட மரங்களை நட்டு வளர்க்க வேண்டும்! இன்று நட்டால் நாற்பது ஆண்டுகள் கழித்துத்தானய்யா பலன்தரும் என்று ஆயாசப்பட வேண்டாம்; வருங்காலத்திற்குப் பாடுட்டுவதே மனிதக் கடமை; ஆகவே வன மகோற்சவம் கொண்டாடுங்கள்”—என்று ஒரு தடவை கூவினார்கள், நம் அரசினர்!

இவர்கள் பேச்சின்படி லட்சோப லட்சம் ரூபாய்களைச் செலவிட்டு வீதிதோறும், வீடுகள் தோறும் மரங்கள் நடப்பட்டன! ஆனால்......அந்தோ நாட்டின் வளத்திற்காக காடு வளர்ப்போம் என்று கூறி நடப்பட்ட மரங்கள் ஆடுகளுக்கும் மாடுகளுக்கும் இரையாயின; மக்களின் வரிப் பணம் வனமகோற்சவத்தின் பெயரால் கால்நடைக்குத் தீனியாயிற்று!

இதோடு இவர்களுடைய ‘அக்பரின் மேதாவிலாச முத்திரை’ முடிந்துவிடவில்லை; அண்மையில் பக்ரா—நங்கலிலிருந்து ஒரு திடுக்கிடும் செய்தி கிளம்பிற்று.

“ஆகா, என்ன பிரம்மாண்டமான அணைக்கட்டுத் திட்டம்; இந்தத் திட்டம் போட்டவர்களின் மூளையே மூளை; அவர்களை நாடு ‘நடமாடும் தெய்வங்’களாக வைத்துக் கும்பிடப் போகிறது; ஆம்; அந்த நிபுணர்களின் கைத்திறனால் ஆக்கப்பட்ட பக்ராவைப் பார்க்காத கண் என்ன கண்ணே! அதைப் பற்றிப் புகழாத நாவென்ன நாவே!”

—என்று புகழாரம் சூட்டப்படுகின்ற பக்ராவிலிருந்துதான் அந்த ‘அதிசயச் சேதி’ வெளி வந்தது.

எப்போதும் அணைக்கட்டுகள் உறுதியான இரு மலைகளுக்கிடையே கட்டப்படுவது வழக்கம். இந்த அடிப்படை உண்மையைத் தெரிந்தோ தெரியாமலோ இரண்டு மலைகளுக்கிடையே பக்ரா அணைக்கட்டைக் கட்டத் துவங்கிவிட்டார்கள். அயல் நாட்டவரிடம் காட்டினார்கள; ‘ஆகா’ என்கிறார்கள் அவர்கள்! நாள் தோறும் ‘பக்ரா நங்கல் பஜனை’ பாரதமெங்கும் பாடப்பட்டது!

ஆனால் இப்போது உண்மை வெளியாகியிருக்கிறது!

அந்த இரண்டு மலைகள் உறுதியானவையல்ல!

மலையின் மேற் பகுதியை இடித்தால் ‘பொல பொல’வென உதிர்கின்றது!

இந்நிலையில், இருந்தால் அணைக்கட்டிற்கே சேதம் வந்து விடும்!

காலம் தாழ்த்தி வெளிவருகிறது உண்மை; பணத்தைக் கொட்டியளந்து அணைக்கட்டை எழுப்பிய பின்னர் ‘மலைகள் உறுதியற்றவை’ என்ற உண்மை வெளிவருகிறது; ‘இப்படியே விட்டால் முதலுக்கே சேதம்’ என்ற பயம் இப்போது தெரிவிக்கப்படுகிறது!

கூடிக் கலந்தார்கள், ‘அக்பர் பரம்பரையினர்’! இனி மலைகளை உறுதிப்படுத்துவது என்ற ‘அதிசய’ முடிவுக்கு வந்தார்கள். அதன்படி...

மலைகளின் பலவீனமான பகுதிகளில் ‘காங்கிரீட்’ கலவை உள்ளே செலுத்தப்படுகிறது—‘இன்ஜெக்ட்’ செய்யப்படுகிறது!

மேற்பகுதிகளுக்குக் காங்கிரீட் சாந்து பூசப்படுகிறது!

மிகவும் மோசமான இடத்தில் குழிவெட்டிக் காங்கிரீட் கொட்டப்படுகிறது!

இடத்தைத் தேர்ந்து எடுக்கும் போதே விவேகத்தைப் பயன் படுத்தாது. இப்போது மலைகளுக்கு மருத்துவம் புரிந்து கொண்டிருக்கிறார்கள்!

இத்தகைய அதிமேதாவிகளின் கையில்தான் இந்த நாடு எனும் பூமாலை சிக்கிச் சீரழிகிறது; இந்நாட்டு மக்களின் வரிப் பணம் இப்படி வீணடிக்கப்படுகிறது; பல வேதனைக் கதைகளுக்கு மூலதனம் ஆகிறது!

இதயமற்றோர் கவனத்திற்கு இரண்டு செய்திகள்!

ஒரு நாள் :

“ஆதித் திராவிடப் பெரு மக்களே! உங்களை உயர்த்தியது காங்கிரஸ்; உங்களுக்காகப் பாடுபடுவது காங்கிரஸ்! எதிர்க் கட்சிகளின் பேச்சை நம்பாதீர்கள்! உங்களுக்கு கோயில் பிரவேசத்திற்கு யார் சட்டம் போட்டது? காங்கிரஸ்! குடி தண்ணீரை எல்லோருக்கும் பொதுவாக்கியது யார்? காங்கிரஸ்! மற்ற ஜாதியாருடன் சரிசமமாக—சுபீட்சமாக — சமாதானமாக வாழ வைத்துக் கொண்டிருப்பது யார்? காங்கிரஸ்!”

— பொதுக் கூட்டத்தில் கனம் கக்கன்.

மற்றொரு நாள்:

ஆடூர் சேரி ஆதித் திராவிட மக்கள் மந்திரி கக்கனின் காலில் விழுந்து ‘கோ’ என்று கதறினார்கள்; கண்ணீர் விட்டனர்; குடி தண்ணீர் தகராறு காரணமாக ஆதித் திராவிடருக்கும், அவர்களல்லாதவர்களுக்கும் கைகலப்பு ஏற்பட்டு ஒரு ஆதித்திராவிடர் செத்துப் போனதும், 56 பேருக்குக் காயம் எற்பட்டு விட்டதுமே இந்த முறையீட்டுக்குக் காரணமாம் !

— பத்திரிக்கைச் செய்தி

சுழல் விளக்கு

மாலுமி

தி. வீராசாமி; கோவை.

(?) அடுத்த காங்கிரஸ் தலைவர் யார் என்ற கேள்விக்கு நேருவின் பேரப் பிள்ளைகள்—என்று பதில் தந்தீர்களே; அவர்கள் வெள்ளைக்காரன் சீமையிலிருந்து திரும்பி வரும் வரை காங்கிரஸ் நிலைத்து நிற்குமா?

காங்கிரஸ் என்ற பெயரில் ஒரு கட்சி நிலைத்து நிற்கலாம்; ஆனால் அதன் கையில் ஆட்சி நிலைத்து நிற்குமா என்பது சந்தேகம்தான்!

காயாம்பூ; பள்ளத்தூர்.

(?) நான் 'நேரு'வாக விரும்புகிறேன்—அதற்கு என்ன செய்ய வேண்டும்?

முதலில் முன் கோபம் வேண்டும்! 'சோஷலிசம்' என்கிற நல்ல சொல்லை உச்சரிக்கிற வாயாலேயே 'நான்சென்ஸ்', 'காட்டுமிராண்டி' என்றெல்லாம் பேசத் தெரியவேண்டும்! எழுதிய கருத்துக்களுக்கு மாறாக நடக்கத் தெரியவேண்டும்! முடியுமா உங்களால்?

செல்வமணி; திருச்சி.

(?) 'ஊழல்' — இச் சொல் எப்போது தோன்றியது?

1947-ம் ஆண்டு, ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி, நள்ளிரவு 12 மணிக்கு!

பி. செயபால்; பொள்ளாச்சி.

(?) காங்கிரஸ் அகராதியில் 'தேசியத் துரோகி' என்றால் என்ன பொருள்?

விடுதலை விரும்பி!

என். ஏ. சிவராமன்; மீனம்பாக்கம்.

(?) முன்பு மொரார்ஜி தேசாய் சென்னைக்கு வந்தபோது கோயங்காவின் வீட்டில் தங்கினாராம். இப்போது மறுபடியும் வருகிறாரே; எங்கே தங்குவார்?

முன்பு அவர் வந்தபோது, விமான நிலயத்தில் 'வருக, வருக! எங்கள் புதிய நிதி அமைச்சரே!' என்று வரவேற்க ஒரு ஈ, காக்காய்கூட இல்லையாம்! அதனால் நேரே கோயங்காவின் வீட்டிற்கு ஓடினார். இப்போது கோயங்காவின் வீடே களையிழந்து கிடக்கிறதாம்; ஆகவே மொரார்ஜி எங்கே தங்குவாரோ; யார் கண்டார்கள்?

ஜி. கே. வேலன்; சத்திரப்பட்டி.

(?) தி. மு. கழகத்தின் செல்வாக்கை ஒடுக்க 'ஐக்கிய முன்னணி' ஒன்றை உருவாக்க வேண்டுமென்று பண்டித நேருவுக்கு, புதிதாக காங்கிரசில் சேர்ந்துள்ள 'ஒருவர்' யோசனை சொல்லியிருக்கிறாரே; அதைப் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

எழுதித்தான் தெரிய வேண்டுமா பதில்? வரலாற்றின் பழைய நிகழ்ச்சிகள், இந்தப் 'பழமையிலும் பழைய' திட்டத்திற்குச் சரியான பதில் தந்திருக்கிறது தோழரே! திராவிட முன்னேற்றக் கழகத்தின் செல்வாக்கை மட்டுமல்ல; திராவிட முன்னேற்றக் கழகத்தையே இந்த நாட்டை விட்டு ஒழித்து விட வேண்டுமென்பதற்காக எத்தனையோ பேர் முஷ்டி உயர்த்தி முயன்று, இன்று 'பின்னணி'க்குச் சென்று விட்டதை மறந்து விட்டீர்களா?

இன்று தமிழரசு காணப் பாடுபடுவதாகச் சொல்லிக் கொள்ளும் ம. பொ. சிவஞானம், திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்த நேரத்திலேயே, அதை ஒழித்துவிட வேண்டும் என்பதற்காக "திராவிட எதிர்ப்பு முன்னணி மாநாடு" ஒன்றையே கூட்டினர்; தீப்பொறிக்கும் தீர்மானங்கள் பலவற்றைப் போட்டார்; ஒரு நிமிடம்கூட விட்டுவைக்கக்கூடாது இந்தப் பிரிவினைவாதிகளை— என்றெல்லாம் புலம்பினர்.

அந்த மாநாட்டில் கலந்து கொண்ட பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் பேசிய கடுஞ் சொற்கள் இப்போதுகூட நம் செவிகளில் ஒலித்தபடியிருக்கின்றன.

அவர் குறிப்பிட்டார்; "மாநாட்டிலே பேசிய சின்ன அண்ணாமலை பேச்சுக் கிடையே சிரித்தார். அது நாட்டைச் சுற்றிச் சூழ்ந்திருக்கும் நாச சக்தியைக் கண்டு மனம்வெம்பிப் புழுங்கிச் சிரித்த வேதனைச் சிரிப்பாகும்" என்று முழங்கினர். அவரைப் போல இன்னும் பலர் 'அழிவு சக்தி திராவிட முன்னேற்றக் கழகம்; அதன் ஆணி வேரைக் கல்லி எறியப் பெரும்படை திரளவேண்டும்!' என்று அழைப்பு விடுத்தார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் குழந்தைப் பருவத்திலேயே அதன் கழுத்தை நெறித்துத் திருகி எறிவதற்கென்று நீண்ட கொடிய கரங்கள் இன்று சக்தியிழந்து விட்டன! வளர்ந்துவிட்ட நம்மை இனி என்ன செய்து விட முடியும், இந்தத் 'தீர்மான பீரங்கி'களால்?

அனிதா; விஜயநகர்.

(?) தனுஷ்கோடியில் புயல் அடித்தபோது நம் டில்லி அமைச்சர்கள் என்ன நினைத்திருப்பார்கள்?

தெற்கே நிகழப் போகும் 'பூகம்ப'த்திற்கு இயற்கை நடத்திக் காட்டிய முன்னறிவிப்பாக இருக்குமோ என்று நினைத்து நடுநடுங்கியிருக்கலாம்!

சென்சாரும் ..

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்த நேரத்தில் டெல்லி மூலவர்களும் அவர்களுக்கு "அக்கப்போர்" எழுதிக் குவிக்கும் ஆட்டு மந்தைகளும் ஒன்றை ஞாபகத்திலே வைத்துக் கொள்ளவேண்டும். தி. மு. கழகத் தோழர்கள் திரைப் படங்களின் மூலம் கொள்கையைப் பரப்புவதுதான் கழகத்தின் பிரதான ஆக்க வேலைத் திட்டம் என்று நினைப்பவர்கள் அல்ல. திரைப்படங்கள்பற்றிய பிரச்சினைகளில் ஈடுபடுவது கழகத்தினரின் அன்றாடக் கழக வேலைகளில் ஒன்று எனவும் யாரும் கருதவில்லை. அப்படிக் கருதுபவர்களைக் கழகம், தட்டிக் கொடுப்பதுவுமில்லை; மாறாகக் கண்டிக்கவும் செய்கிறது.

எல்லாத் துறைகளிலும் நாட்டுக்குத் தேவையான நல்ல கொள்கைகளைப் பரப்புவது போலவே திரைப்படத் துறையிலும் எண்ணியதைச் சொல்ல முயலுகிறோம். நாங்கள் சொல்லுகிறோம் என்பதற்காகக் கத்தரிக் கோலைக் கண்டபடி பிரயோகிக்கும் பாரபட்சம் காட்டப்பட்டு வருகிறது — அதையும் உணருகிறோம்.

இந்த நிலை மாறிட நீதிமன்றத்துப் படிகளில் ஏறிய பிறகுதான் இந்த நாட்டில் நீதி கிடைக்குமென்றால் அந்தச் சவாலையும் ஏற்றுக் கொள்ளும் காலம் விரைவில் வந்தே தீரும் என்பதையும் "டில்லி" யாரும் "அக்கப் போரா"ரும் உணர்ந்திட வேண்டும்.

கழகத்திற்குக் கலைத் துறையிலும் ஈடுபாடு உண்டு! கலைத் துறையிலே மட்டுமே ஈடுபட்டுக் காலங் கழிப்பதல்ல கழகம்! இதை யுணராத புலியை இடறாதீர் என எச்சரிக்கிறோம்!

★

பி. வாசுதேவன்; புதுடெல்லி.

(?) அரை நிர்வாண ஆபாசப் படங்களைக் கொண்ட பத்திரிகைகளும், புத்தகங்களும் ஏராளமாக வெளி நாடுகளிலிருந்து இங்கே இறக்குமதியாகின்றனவே; அதைத் தடுக்க முடியாதா?

ஏன் முடியாது? சர்க்காரின் செவிகள் உங்களைப் போன்றவர்களின் குரலுக்கு மதிப்பளிக்க வேண்டும். அன்னிய செலாவணிக் கட்டுப்பாடு என்று சொல்லி, அத்யாவசியப் பொருட்கள் பலவற்றைஇறக்குமதி செய்வதற்கு அனுமதி தருவதில்லை, அரசாங்கம். உயிர் காக்கும் மருந்து வகைகள் பல வருவது கிடையாது! இயந்திரங்கள் இறக்குமதி செய்வதிலும் ஏராளமான தொல்லை! பத்திரிகைகளுக்குத் தேவையான 'நியூஸ் பிரின்ட்' காகிதங்கள் வரவழைப்பதில் மண் விழுந்தது! இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் காரணம், நம் நாட்டுப் பணம் வெளிநாடுகளுக்குச் செல்லக்கூடாது என்றே சொல்லப்படுகிறது. ஆனால், அந்தோ பரிதாபம்! அப்படிக் காப்பாற்றுகிற பணத்தில் ஒரு பகுதிதான் நீங்கள் குறிப்பிடும் 'ஆபாச இலக்கியங்'களுக்காகக் கடல் கடந்து செல்கிறது!

பூமியதிரச் செல்லுது...

[10-ம் பக்கத் தொடர்ச்சி]

ஒவ்வொன்றிலும் ஒன்றுக்கொன்று மாறான நிலையில் இருக்கின்றன!"

நாம் நாட்டு விடுதலைபற்றிப் பேசுகின்றபோது 'பொருளாதாரத்தை'யும், 'பாரத ஒற்றுமை'யையும் காட்டி மிரட்டுபவர்கள் மிரளத்தக்க அளவிற்கு மேலே கண்ட பேச்சு இருக்கிறது.

* நாம் கூறுகிறோம், "வளம் பல உள்ளன இங்கே! ஆனால் அரசினரின் பார்வைதான் இவற்றின்மேல் விழ மாட்டேன் என்கிறது!" — என்று. நாம் அறிந்த பல ஆதாரங்களை எடுத்துக் காட்டி!

பொருளாதார மேதையான அவர் இந்த அரசு செய்யத் தவறியவைகளை—செய்ய வேண்டியவைகளை எடுத்துக் கூறுகிறார், அடுக்கடுக்காக!

* நெய்வேலியில் அரசினர் சிரத்தை எடுத்து வேலை செய்தால் இன்ஜினியரிங் தொழிலுக்குத் தேவையான எரிபொருள் கிடைக்கும்.

* நெய்வேலிக் கரி கிடைத்தால், காட்டு மரங்களை எரித்துக் கரியாக்க வேண்டிய அவசியமில்லை.

* அக்காட்டு மரங்களைக் காகிதத் தொழிற்சாலைக்குப் பயன்படுத்தலாம்.

* நெய்வேலிக்கரி கிடைத்துவிட்டால், உர உற்பத்தியும், தெர்மல் மின்சார உற்பத்தியும் ஆரம்பமாகிவிடும்.

* உற்பத்தித் தொழிற்சாலைகள் ஏற்பட ரயில்பாதை தென்னாட்டில் இன்னும் போட வேண்டும்.

* சேலத்து இரும்புக் கனி தூங்குகிறது; ஆனால் அதன் தரமோ உயர்ந்தது!

* ஆரம்பத்தில், சீனாவில் உள்ளதைப் போல் குறைந்த செலவில் நடத்தர உருக்கு ஆலைகள் ஏற்படுத்தலாம், அங்கு!

* பின்னர், நெய்வேலியினின்று சேலம் வரையுள்ள பகுதி ரூர்கேலா பகுதி போல் உருக்குத் தொழிலில் புகழ் பெறும்.

* தூத்துக்குடித் துறைமுகம் நல்ல துறைமுகம்; அதை ஆழப்படுத்த வேண்டும்!

* தூத்துக்குடி உப்பளத் தொழிலில் கவனம் செலுத்தினால்,'சோடா ஆஷ்' உற்பத்தி செய்து நல்ல மார்க்கட் பிடிக்கலாம்!

— இப்படிக் கோரிக்கைகளைக் கூறுவதோடு நின்றுவிட்டார், அவர் பொருளாதார நிபுணராக இருக்கிற காரணத்தால்!

ஆனால் அரசியல் வாதிகளாகிய நாமோ ஏனிந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதில்லை என்று புதுக் கேள்வியைக் கேட்கிறோம்; திருப்பித் திருப்பிக் கேட்கிறோம்!

வடவரின் வஞ்சக எண்ணம், ஆதிபத்திய வெறி, என்பதைப் பதிலாகப் பெறுகிறோம்; எனவே, என் ரத்தத்தை உறிஞ்சி உண்பவனிடம் கூட்டு வேண்டாம் என்ற முடிவுக்கு வந்து விடுதலை கீதம் முழக்குகிறோம்; பலதுறை அறிஞர்களின் உள்மார்ந்த ஆதரவுடன்!

— திருப்பூர் அடியார்

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, முரசொலி அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு